www.padippakam.com

# காந்தி-காங்கிரசு துரோக வரலாறு



படிப்பகம்

www.padippakam.com

வெளியீடு :

புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி
[REVOLUTIONARY STUDENTS & YOUTH FRONT]
தமிழ்நாடு

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 15, 1985
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட் 15, 1986
மூன்றாம் பதிப்பு: ஆகஸ்ட் 15, 1991

விலை ரூ. 2

தொடர்புக்கு :

படிப்பகம்

www.padippakam.com

# காந்தியும் காங்கிரசும்

## – ஒரு துரோக வரலாறு

"**கா**ங்கிரசை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு காந்தியின் வருகைவரை நாடு காத்திருந்தது. அவர் காங்கிரசை சாதாரண மக்களின் கட்சியாக, ஏழை எளியவர்களின் இயக்கமாக மாற்றினார். காங்கிரசின் தன்மையையும், அதன் பார்வையையும் மாற்றி நாடு விடுதலை பெறுவதில் வெற்றி கண்டார். பல்வேறு கட்டங்களில் புதிய எண்ணங்களும் புதிய பார்வைகளும் சங்கமமாகி மிகப்பெரும் சக்தியாக காங்கிரஸ் விளங்கி வருகிறது. ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண பல்வேறு வழிகள் உள்ளன. இதைக் காங்கிரஸ் தன்னகத்தே எடுத்துக் கொண்டது. அதனால்தான் அடிப்படைக் கொள்கைகளாக சுதந்திரம், மதச்சார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம் போன்ற உயர்ந்த லட்சியங்களை மக்கள் முன் வைக்க முடிந்தது."

— ராஜீவ்காந்தி

*- இல்லை. ஒரு போதும் இல்லை. நூற்றாண்டு காலமாக காங்கிரசு கட்சி நமது மக்களை ஏமாற்றி, துரோகப் பாதையில் இட்டுச் சென்று, அவர்கள் வாழ்வை நாசமாக்கியதே உண்மை. சென்னை காங்கிரஸ் நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் ராஜீவ் பேசிய இப்பேச்சுக்கள் உண்மைக்கு மாறானவை; கபடத்தனமானவை; மக்களை மேலும் ஏமாற்றி ஏய்த்துப் பிழைப்பதற்காகக் கூறப்பட்டவை.*

*கத்தியின்றி, ரத்தமின்றி, வெட்கமின்றி கைராட்டை சுற்றிச் சுற்றி, உண்ணாவிரதப் போர்முறையின் மூலமே வெள்ளையனிடமிருந்து 'விடுதலை' பெற்றுவிட்டோம்.*

படிப்பகம்

*'தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தி திரும்பி காங்கிரசின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டவுடன் காங்கிரசின் தன்மையும் பார்வையும் மாறியது.' நமது பாடசாலைப் புத்தகங்கள் போதிக்கின்ற இந்த விவரங்கள் சாரமற்று நீர்த்துப்போன பழங்கஞ்சிக்கு ஒப்பானது. எள்ளின் முனையளவும் உண்மையற்றவை. காங்கிரசின் பிறப்பே வேசித் தனமானது; மக்களின் முதுகிலே குத்திக் குத்திக் காயப்படுத்திய காந்தி - காங்கிரசின் வரலாறோ துரோகம் மிக்கது.*

## வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கள்ளக்குழந்தை

- ''உலகில் நாகரிகமடைந்த நாடுகள் அளவுக்குப் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியை நாம் அடைவதற்கு பிரிட்டிஷாருடைய தொடர்பு நமக்கு நீண்ட காலத் துக்குத் தேவையாகும்.''

(1893-ல் தாதாபாய் நவ்ரோஜி)

- ''இங்கிலாந்து நாட்டுக்குப் படித்த வகுப்பினர் எதிரிகளல்ல; நண்பர்களாவர்.''

(1898-ல் காங்கிரஸ் தலைவர் அனந்த மோகன் போஸ்)

- ''பிரிட்டனுக்கு விசுவாசமாக இருந்து ஊசலாட்டமின்றி சேவை செய்வதேயல் லாமல் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றுவதல்ல! மாறாக அதன் அடிப்படையைப் பரவலாக்குவதாகும்.''

(சுரேந்திரநாத் பாணர்ஜி)

- ''இந்திய மக்கள் உடனடியாக மாற்றத்தையோ புரட்சியையோ விரும்ப வில்லை... நிலவுகின்ற அரசை பலப்படுத்தவும், அதை மக்களோடு நெருக்கமாகக் கொண்டு வரவும் தீர்மானித்துள்ளனர். இந்திய விவசாயம் மற்றும் தொழில்களைப் பிரதிநிதித்துவப்படுத்த அரசு செயலகத்திலும், வைசிராயினுடைய நிர்வாகக் குழுவி லும் சில இந்திய உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென விரும்புகின்றனர்.''

(1901-ல் காங்கிரஸ் தீர்மானம்)

*— வேறொன்றுமில்லை. இவையாவும் மூத்தகால காங்கிரஸ் தலைவர்களின் பொன்மொழிகள். வெள்ளையனின் பாதார விந்தங்களை நக்கி ருசிகண்ட நாக்குகளி லிருந்து வெளிப்பட்ட இந்த வாக்கு மூலங்களும் தீர்மானங்களும் எதை நிரூபிக்கின் றன?*

*மாண்டேகு - செம்ஸ்போர்டு என்ற வெள்ளையர்களின் அறிக்கை இதற்கான பதிலைக் கூறுகிறது.*

''இந்திய மக்களில் அரசியல் மனப்பான்மை கொண்ட பகுதியினர்... அறிவுபூர் வமாக நம் குழந்தைகள். நாம் முன் வைத்த கருத்துக்களை அவர்கள் மனதில் வாங்கிக் கொண்டார்கள்.''

(மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கை 1918-பக்:115)

*இதை உறுதிப்படுத்தி காந்தி கூறுகிறார்:*

''இந்த ஸ்தாபனம் (காங்கிரஸ்) முதன் முதலாக ஒரு ஆங்கிலேயரால்தான் ஏற்படுத்தப்பட்டதென உங்களிடம் கூறுகையில் நான் அளவிலா ஆனந்தமடைகி

www.padippakam.com

றேன். காங்கிரஸ் மகாசபைக்கு ஆலன் ஆக்டேவியன் ஹீயும் என்ற ஆங்கிலேயர் தகப்பனாக விளங்கினார்.''

(இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் காந்தியின் உரை)

உண்மைதான், இவர்களே பெருமைப்பட்டுக் கொள்வதைப் போல் காங்கிரஸ் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அறிவு பூர்வமான குழந்தைதான்; மறுப்பதற்கில்லை. இந்த அறிவு பூர்வமான கள்ளக் குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டிய அவசியம் பற்றி சர். வில்லியம் வெட்டர்பர்ன் என்ற வரலாற்று ஆசிரியன் கீழ்கண்டவாறு கூறுகிறான். 1878-ம் ஆண்டு, ஆயுதக் கட்டுப்பாட்டுச் சட்டம், தாய் மொழிச் செய்தி யேடுகள் தடைச்சட்டம் ஆகிய சட்டங்கள் கொண்டு வந்ததையொட்டி அவன் கூறுகிறான்:

''ரசியபாணி போலீஸ் அடக்குமுறையுடன் அதிர்ஷ்டம் கெட்ட இந்த பிற்போக்குச் சட்டங்களும் சேர்ந்து லிட்டன் பிரபுவின் கீழ் இருந்த இந்தியாவை புரட்சிகரமான எழுச்சிக்கு வெகு அருகாமையில் இழுத்துச் சென்றுவிட்டன. தக்க தருணத்தில் திரு. ஆலன் ஆக்டேவியன் ஹீயூமும், அவருடைய இந்திய ஆலோசகர்களும் தலையிட ஊக்கம் கொண்டனர்.''

(சர். வில்லியம் வெட்டர்பர்ன்; ஆலன் ஆக்டேவின் ஹீயூம், இந்திய தேசிய காங்கிரசின் தந்தை என்ற நூலில், 1913; பக்:101)

1857-ல் வீறுகொண்டு எழுந்த முதல் சுதந்திரப் போரினைத் தொடர்ந்து காலனியாட்சியாளர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியைத்தான் வெட்டர்பர்ன் மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார். ஹீயூமும் அவனுடைய ஆலோசகர்களும் இவ்விசயத்தில் ஊக்கத்தோடு தலையிட்ட காரணத்தைச் சொல்லும் முன்பாக சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவது இங்கு பொருத்தமானது.


## கருவாகி உருவான கதை

மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை, பிராந்திய, சாதி, மத அடிப்படையில் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் தன்னுடைய இராணுவ பலம் ஒன்றை மட்டுமே கொண்டு நசுக்குவது இயலாத ஒன்றாக மாறி வந்தது. வீழ்ந்து வரும் மக்களின் வாழ்நிலை,எதிர்ப்புணர்வின் பேரலைகளாய் சீற்றம் கொண்டன. சீர்திருத்தங்களை வழங்கி எதிர்ப்புணர்வினை மழுங்கடிக்கும் உபாயம் கூட அதிக நாள் அரசுக்கு கைகொடுக்கவில்லை. எண்ணற்ற சமூக சீர்த்திருத்த மற்றும் மத ரீதியான அமைப்புகள் ஏகாதிபத்தியத்தால் ஊக்கம் கொடுக்கப்பட்டன. நில உடமை மற்றும் தரகு முதலாளிய வர்க்கத்திலிருந்து உதித்துவந்த ராஜாராம் மோகன்ராய், ராமகிருஷ்ண பரமஹம்சர், பக்கிம் சந்திர சட்டர்ஜி, சையத் அகமது அலி, அமீர் அலி போன்றோரின் தலைமையிலான சீர்திருத்த அமைப்புகள் இவர்களுக்குப் போதுமானதாக இல்லை. 'அரசியல் நிறுவனம்' என்ற வெற்றிடம் நிரப்பப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது.

1838-ல் வங்கத்தில் தோன்றிய வங்க நிலஉடமையாளர் சங்கமும், அதை தொடர்ந்து ஏற்பட்ட பிரிட்டிஷ் இந்திய சங்கமும், 'அரசியல் நிறுவனம்' என்ற வரையறுப்புக்கு உட்பட்டவை எனலாம். வெள்ளையனின் முதல் விசுவாச அமைப்புக்களாகத் தோன்றிய இவ்வமைப்புக்கள் 1851-ல் ஒன்றாக இணைந்தன. இதே



படிப்பகம்



போன்ற சங்கங்கள் சென்னை, பம்பாய் போன்ற பல்வேறு நகர்களில் நிறுவப்பட்டன. ஆட்சியாளர்கள் மீது நல்லெண்ணம், நீதியுணர்வு, விசுவாசம் ஆகியவற்றை மக்கள் கொள்வது, 'மாட்சிமை பொருந்திய' வைசிராய், கவர்னர்கள் போன்றோரிடம் கோரிக்கை மனு கொடுத்து தங்கள் குறைகளை தெரிவிப்பதற்கு மக்களுக்கு கற்றுக் கொடுப்பது இச்சங்களின் நோக்கம். அப்போது கலெக்டராக இருந்தவரும், பிற்காலத் தில் காங்கிரஸ் தலைவருமான தாதாபாய் நவ்ரோஜி பம்பாய் சங்கத்தில் உறுப்பினர்.

அரசியல் தேவையை நிறைவு செய்ய உருவாக்கப்பட்ட இவ்வமைப்புகள் வெள் ளையர்கள் எதிர்பார்த்தவாறு செயலாற்ற முடியவில்லை. அதேசமயம் கோரிக்கை மனு கொடுத்து தங்கள் வாழ்வை முன்னேற்றிக் கொள்ள மக்களும் தயாராக இல்லை. இதே காலகட்டத்தில் பயங்கரப் பஞ்சமாக உருவெடுத்த பொருளாதாரத் துயரங்கள் மக்கள் கலகங்களாய் வடிவெடுத்தன. இந்த மக்கள் கலகங்கள் எப்படியிருக்கும், அதன் தன்மை என்ன என்பதை அப்போது நாடு முழுவதும் இருந்து வந்த முப்பதாயி ரத்துக்கும் மேற்பட்ட நிருபர்களின் தகவல்களை - குறிப்புகளை வெட்டர்பர்ன் ஆதார மாகக் கூறுகிறான்:

"இப்போது உள்ள நிலைமையில் நிராசையுற்ற இந்த ஏழை மக்கள் பட்டினி கிடந்து சாக வேண்டியதாகும் என்று திகில் கொண்டு 'ஏதாவது' செய்ய வேண்டும் என விழைவதையே அக்குறிப்புகள் எல்லாம் காட்டின... அந்த 'ஏதாவது' என்பது 'வன்முறையே'! பழைய வாள்களையும், ஈட்டிகளையும், தீக்குச்சி, வெடித்துப்பாக்கி

www.padippakam.com

களையும் ரகசியமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததையும், தேவைப்படும்போது தயாராக இருக்கும் என்பதையும் எண்ணற்ற குறிப்புகள் காட்டின.

(மேற்படி புத்தகம்; பக்:80)

*நெருக்கடியான இந்நேரத்தில்தான் ஹியூமும், அவனுடைய இந்திய ஆலோசகர்களும் ஊக்கமாக இவ்விசயங்களில் தலையிட்டனர். எதிர்வரும் ஆபத்தின் தன்மையை துல்லியமாக ஹியூம் உணர்ந்திருந்தான்.* ''மிகப் பயங்கரமானதொரு புரட்சியின் பெருத்த அபாயத்தில் நாம் உண்மையாகவே இருக்கிறோம் என்பதைப் பற்றி அப்போதோ அல்லது இப்போதோ எனக்கு எள்ளளவும் சந்தேகம் ஏற்பட்டதில்லை'' *என ஆட்சியாளர்களை எச்சரித்த ஹியூம், செய்ய வேண்டியது என்ன என்பதையும் மிகத் தெளிவாகக் கூறினான்.*

''இந்த மக்களிடையே அதிருப்தியுள்ளவர்கள் 1857-ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போரினைக் காட்டிலும் தீவிரமான ஒரு எழுச்சியில் பிரிட்டனுக்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள் என எனக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. இது பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நீடிப்பதற்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையை இல்லாதொழிக்க வேண்டுமானால் பிரிட்டனுக்கு பாதுகாப்பு வால்வைப் (Safety Valve) போல செயல்படக் கூடிய - இந்திய மேல்தட்டு வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசியல் அமைப்பை உருவாக்குவது மிகமிக அவசியம்.''

*தன் திட்டத்தை செயல்படுத்த தேர்ந்த அரசியல்வாதியும் வைசிராயுமான டப்பரின் பிரபுவை ஹியூம் சந்தித்தான். இவர்கள் சந்திப்பின் எதிரொலியாய், பிறப்பெடுத்த காங்கிரசின் கதையை அதன் முதல் தலைவர் டபிள்யூ.சி. பானர்ஜி தன்னுடைய* **''இந்திய அரசியலின் அறிமுகம்''** *என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:*

''டப்பரின் பிரபு இவ்விசயத்தில் மிகுந்த அக்கறை காட்டினார். சிறிது காலம் சிந்தித்த பிறகு அவர் ஹியூமை அழைத்தார். ஹியூமின் திட்டத்தால் பயனேதும் இராது என்பதே தம் கருத்து என்று கூறினார். இங்கிலாந்தில் அரசியின் எதிர்க்கட்சி ஆற்றும் பணியை இந்நாட்டில் ஆற்றக் கூடிய குழுக்கள் ஏதுமில்லை... இந்திய அரசியல்வாதிகள் வருடத்துகொருமுறை கூடி, நிர்வாகத்தில் எவ்வித குறைகள் உள்ளன, அவற்றை திருத்த வழி என்ன என்பதைக் குறிப்பிட வேண்டும் என்ற அவர், தம் கருத்துப்படி கூடுகிற கூட்டத்திற்கு அங்குள்ள கவர்னர்கள் தலைமை வகிக்கக் கூடாது என்றும், ஏனெனில் கவர்னருக்கு முன்னிலையில் மக்கள் மனம்விட்டுப் பேசமாட்டார்கள் என்றும் உரைத்தார். டப்பரின் பிரபுவின் யோசனை திரு. ஹியூமுக்கும் திருப்தி தந்தது...''

*ஏகாதிபத்திய எஜமானர்களோடு சோரம் சென்று பெற்றெடுக்கப்பட்ட காங்கிரஸ் இவ்வாறுதான் இந்திய அரசியல் மேடையில் அரங்கேறியது. தாராள குணம் படைத்த ஏகாதிபத்தியத்தின் பாரம்பரியக் கொள்கை இங்கே தெளிவாகிறதல்லவா? வன்முறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சிகர நிலைமைக்கு எதிரான ஒரு கருவியாக 'தேசிய' காங்கிரஸ் செயல்பட வேண்டும். அதிகார வட்டத்தின் இந்நோக்கம் ஏதோ பிற்காலத்தில் ஏற்பட்ட ஒன்று அல்ல; ஏகாதிபத்தியத்தின் தொடக்க காலத்திலேயே ஏற்பட்ட ஒன்று. கீழ்கண்ட மேற்கோள் இதை மிகத் தெளிவாக நிரூபிக்கின்றது.*



படிப்பகம்

''1857க்குப் பின், அதாவது காங்கிரஸ் தோற்றத்துக்கு முந்தின சில ஆண்டுகள் மிக மிக அபாயகரமானவை. வரவிருந்த அபாயத்தை உணர்ந்து அதை தடுக்க முயன்றவர் ஆங்கில அதிகாரிகளில் ஒருவரான ஹீயும்... ஒரு அகில இந்திய அமைப்புக்கான காலம் முற்றிலும் கனிந்திருந்தது. ஒரு விவசாய எழுச்சி படித்த வகுப்பாரின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற்றிருக்கலாம். அதனிடத்தில் புதிய பாரதத்தை படைப்பதற்கு புதிதாய் தோன்றிய வகுப்பினருக்கு அது ஒரு தேசிய மேடையை அளித்தது. வன்முறையை அடிப்படையாக கொண்ட ஒரு புரட்சிகரமான நிலைமை மீண்டும் தோற்றுவிக்கப்படுவதைக் காலப் போக்கில் தடுத்தது என்பதால் எல்லாம் நன்மைக்கே எனக் கொள்ளவேண்டும்.''

(ஆண்ட்ருஸ், முகர்ஜி: 'இந்தியாவில் காங்கிரஸ் தோற்றமும் வளர்ச்சியும்' பக்: 128-9)

*1885-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் நாள் சரியாக பன்னிரண்டு மணிக்கு ஹீயுமால் துவக்கி வைக்கப்பட்ட காங்கிரஸ், ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறியும் வன்முறையை அடிப்படையாகக் கொண்ட சூழ்நிலையை தடுக்கும் கேடயமாகவும், விவசாயப் புரட்சியை ஒழித்துக் கட்டும் வாளாகவும் செயல்படத் துவங்கியது என்பதே உண்மை. தாதாபாய் நவ்ரோஜி, திலகர், கோகலே,காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ் - ஆகியோருடைய தலைமையின் கீழ் மக்கள் போராட்டங்களை தடுத்து ஏகாதிபத்திய எஜமானர்களுக்குச் சேவை செய்யும் நாயாகவே காங்கிரஸ் செயல்பட்டுள்ளது. இது தவிர மக்களைச் சாதி, மத அடிப்படையில் பிரித்து மோதவிட்டு தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வேறு சில அடிவருடிக் கட்சிகளும் தேவைப்பட்டன. அதன்படி 1901-ல் முஸ்லீம் லீக்கும் 1918-ல் இந்து மகாசபையும் தோற்றுவிக்கப்பட்டன.*

## விசுவாச நாய்கள்

*1917-ல் உலகையே குலுக்கிய மாபெரும் அக்டோபர் புரட்சியின் வீச்சு கீழ்திசை நாடுகளை வந்தடையும் வரை காங்கிரஸ் முழுக்க முழுக்க ஏகாதிபத்தியங்களின் விசுவாச ஊழியனாகவே செயல்பட்டுள்ளது. முதல் உலகப் போரின் போது தான் ஒரு அடிமைச் சேவகன் என்பதை பிறந்த மேனியாக வெளிக்காட்டியது. காங்கிரசார் பிரிட்டிஷாரின் யுத்தக் கொள்கையை வெளிப்படையாகவே ஆதரித்தனர். ''பேரரசின் விரைவான வெற்றிக்காக எல்லா வகையிலும் இந்திய மன்னர்களும் மக்களும் ஒத்துழைப்பார்கள்'' என ஜின்னா, லஜ்பதிராய் உட்பட அப்போது லண்டனிலிருந்த காங்கிரஸ் பிரதிநிதிக் குழு இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷ் அரசுச் செயலருக்கு கடிதம் எழுதியது.*

*இதே நேரம் தென்னாப்பிரிக்காவிலிருந்து புதிதாக லண்டனுக்கு வந்த காந்தி ஹோட்டல் செசியில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குக்கான பதிலில் தனது அடிவருடித்தனத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார். லண்டனிலிருந்த இளம் இந்திய நண்பர்களை ''அரசாங்க ரீதியாக''ச் சிந்தித்து 'தங்கள் கடமையை ஆற்ற வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.*

*இது மட்டுமா? தன் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசு செயலருக்கு வலிந்து கடிதம் எழுதிய காந்தி லண்டனில் இந்தியத் தொண்டர்கள் கொண்ட துயர் துடைப்பு (ஆம்புலன்ஸ்) படை நிறுவி பிரிட்டிஷாருக்கு சேவை செய்தார்.*

www.padippakam.com



இதற்காக கைசர்-இ-ஹிந்த் பட்டமும் தங்கப் பதக்கமும் பெற்றுக் கொண்டார். இதற்கு முன்னர் தென்னாப்பிரிக்காவில் இருந்த போது 'போயர் யுத்தத்தில்' பிரிட்டிஷாருக்கு செய்த சேவைக்கு 'போயர் யுத்தப் பதக்கத்'தை ஏகாதிபத்தியத்திடம் பெற்றுக் கொண்டவர்தான் காந்தி!

சுயராஜ்ஜியத்தை வென்றெடுக்க 'காந்தி மகான்' கூறிய யோசனை ''காலனி இராணுவத்தில் சேர்ந்து பணி யாற்றுங்கள்'' என்பதே. முதல் உலகயுத்தம் முடியும் வரை பிரிட்டிஷாரின் கௌரவ இராணுவ ஆள் சேர்ப்பு அதிகாரியாக செயல்பட்ட காந்தி ''ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் இதோ, ஒரு பொன் னான வாய்ப்பு; பயன்படுத்திக் கொள்ளுங்கள்'' எனத் துண்டு பிரசுரங்கள் மூலம் மக்களைக் கேட்டுக் கொண்டார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மக்கள் ஆயுதமேந்திய போதெல்லாம் ஆயுதங்களைக் கீழே போடச் செய்வதற்கு தன் உயி ரையே பணயம் வைத்த இந்த 'உத்தமனின்' ஏகாதிபத்திய சேவையைக் குறைத்து மதிப்பிட முடியுமா என்ன?

இதுமட்டுமின்றி 1914, 1915, 1916-ஆம் ஆண்டுகளில் முறையே சென்னை, பம்பாய், உத்தரபிரதேசம் ஆகிய இடங்களில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் பிரிட்டிஷ் ஆளுநர்கள் சிறப்புக் கவனம் எடுத்துக் கொண்டு நேரடியாகப் பங்கு கொண்டு ஆலோசனைகள் வழங்கியுள்ளனர்.

ஏகாதிபத்தியத்திற்கு நேரடிச் சேவை - அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு; இந்த வழியைத்தான் காங்கிரஸ் தன்னகத்தே கொண்டிருந்தது. இதுதான் அதன் இன்றைய கொள்கையும் கூட. ஆனால் ஒரு வித்தியாசம்; இன்று பல்வேறு ஏகபோகங்களுக்கும் சேவை செய்து பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது. ''ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண பல்வேறு வழிகள் உள்ளன. இதை காங்கிரஸ் தன்னகத்தே எடுத்துக் கொண்டது.'' - ராஜீவின் சென்னை காங்கிரஸ் நூற்றாண்டு விழாப் பேச்சின் சாரம் இதுவன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

## தீவிரவாதமும் ஒத்துழையாமையும்

ஏகாதிபத்தியமும் அதன் கைக்கூலி காங்கிரசும் எவ்வளவுதான் கபடத்தனமாகச் செயல்பட்ட போதும் மக்களின் உணர்வுகள் போராட்டங்களிலேயே கிளர்தெழுந் தன. புரட்சிகரமான மக்கள் போராட்டங்கள் நாடுமுழுவதும் பேரலையாய் எழுந்தன. பம்பாய், சென்னை, அகமதாபாத் போன்ற நகரங்களில் தொழிலாளர் போராட்டங்க ளும், பஞ்சாப், உ.பி, பீகார் போன்ற மாநிலங்களில் படித்த அறிவுஜீவிகள் மற்றும் மாணவர்கள் அடங்கிய புரட்சிகர குழுக்களும் தோன்றின.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் ''கேதார்'' கட்சி என்ற வன்முறைப் பாதையில் நம்பிக்கை கொண்ட ஒரு புரட்சிகரக் கட்சியை அமைத்து விடுதலையை நோக்கமாகக்கொண்டனர். 1913-ம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ என்ற அமெரிக்க



படிப்பகம்

www.padippakam.com

நகரில் அமைக்கப்பட்ட கேதார் கட்சி ''கேதார்'' (புரட்சி) என்ற உருது பத்திரிக் கையை அச்சடித்து புரட்சிக் கருத்துக்களை பரப்பியது. அப்பத்திரிக்கையின் ஒரு இதழ் ஒருமுறை இவ்வாறு விளம்பரப்படுத்தியது:

**தேவை:** புரட்சி செய்ய விருப்பமுள்ள இளைஞர்கள்
**ஊதியம்:** மரணம்
**பரிசு:** வீரத்தியாகி என்ற பட்டம்
**பென்ஷன்:** இந்திய விடுதலை
**பணியாற்றும் இடம்:** இந்தியா

இந்தப் பத்திரிக்கை வெளி நாடுகளில் வாழும் இந்தியரை நாட்டின் விடுதலைக் குப் பணியாற்றும் வகையில் புரட்சிகர உணர்வைத் தட்டி எழுப்பியது.

நாட்டு விடுதலை மீது மாளாக் காதல் கொண்ட புரட்சிகர இளைஞர்கள் மத்தியில் 1917-ம் ஆண்டு ரசியப் புரட்சியை தொடர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு வேகமா கப் பரவியது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடு முழுவதும் இளைஞர்க ளும் மாணவர்களும் தொழிலாளர்களும் புரட்சிகர வன்முறையை நோக்கித் திரும்பு வதைக் கண்ட காங்கிரசிற்குத் தன்னுடைய செயல் முறையை சிறிது மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ராஜீவ் குறிப்பிட்டதைப் போல, ''புதிய எண்ணங்களும் புதிய பார்வைகளும் சங்கமமாகி'' அகிம்சை, ஒத்துழையாமை என்ற அட்டைக் கத்தி போராட்டங்களை மக்கள் முன் வைத்தது.

மக்களின் போராட்டத்தை திசைதிருப்பி ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த காந்தி அதற்கான காரணமாகக் கூறுவதைக் கேளுங்கள்:

''மனுப் போடுவது போன்றவற்றால் வளரும் தலைமுறை திருப்தியடையாது என நினைக்கிறேன்...புயல் வருவதைத் தடுத்து நிறுத்த ஒத்துழையாமைதான் ஒரே வழி என்று எனக்குத் தெரிகிறது.''

காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தற்கான காரணத்தை புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

அதுசரி; ஒத்துழையாமை இயக்கம் என்பது என்ன? காந்தி மேலும் கூறுகிறார்: ''1919-ம் வருஷம் வரை கண்மூடித்தனமாக நான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சேவை செய்தேன். பிறகே கண் திறந்தது. அதன் பயனாக ஒத்துழையாமை இயக்கத் தைத் தோற்றுவித்தேன். அதுவே சிறந்த ஆயுதமென இன்னமும் கருதியிருக்கிறேன். நாட்டு மக்கள் என்னோடு சேர்ந்து உழைத்தால், பிரிட்டிஷாரால் சுமத்தப்படக் கூடிய இன்னல்களைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டால், கல் நெஞ்சையும் கரைத்து விடலாமென நான் உறுதி கூற முடியும்.''

(காந்தி வைஸ்ராய்க்கு எழுதிய கடிதம், மார்ச் - 2, 1930)

பிரிட்டிஷாரின் கல்நெஞ்சைக் கரைக்க காந்தியார் முன்வைத்த ஒத்துழையா மைத் திட்டங்கள் என்ன? பிரிட்டிஷார் கொடுத்த பட்டங்களைத் துறப்பது; சட்டமன் றங்களையும், நீதிமன்றங்களையும், கல்வி நிறுவனங்களையும் துறப்பது; மதுவிலக்கு, ராட்டை சுற்றுவது, பிரார்த்தனை செய்வது ஆகியவைகளே! இந்த இயக்கம் காந்தி



படிப்பகம்

யால் தீர்மானிக்கப்படும் ஒரு 'நல்ல நாளில்' வரி கொடுப்பதில்லை என்ற நடைமுறையில் போய் முடியும். சொல்லிலும் செயலிலும் இது வன்முறை இல்லாமல் இருக்க வேண்டும்.

## சாத்வீகச் சதிச்செயல்

1921-ம் ஆண்டு வைசிராயாக வந்த ரீடிங்கைச் சந்தித்து காந்தி வாழ்த்துக் கூறியபோது, ''காங்கிரஸ் இயக்கம் வன்முறையைக் கையாளாதவரை ஆங்கிலேயே அரசாங்கம் காங்கிரசின் விவகாரங்களில் தலையிடாது'' என்று உறுதி மொழியளித்தான். காந்தியும் அவ்வாறே நடந்து கொள்வதாக உறுதியளித்தார். இப்படித்தான் காங்கிரசும் காந்தியும் ஒத்துழையாமை நாடகத்தை நடத்தினர். மக்களின் முதுகிலே குத்தும் பச்சைத் துரோகம் என்பதன்றி வேறென்னவென்று இதைக் கூறுவது?

சாத்வீகப் போர் என்றால் என்ன? கோகலே கூறுகிறார்: ''இந்தப் போர் வலுச் சண்டையைச் சாத்வீக ஆயுதங்களால் எதிர்க்கும் முறையாகும். சாத்வீகப் போர்வீரன் தன் ஆயுதங்களை மனதில் தரித்தவன். பிறர் கொடுமையை ஒழிக்க இந்த வீரன் தன்னைத்தானே துன்பத்திற்குள்ளாக்கிக் கொள்கிறான். மனிதனின் மிருகத்தனத்தை இவன் தன் ஆத்ம சக்தியால் வெல்ல எத்தனிக்கிறான். இதில் நம்பிக்கை வைத்தவன் தன்னுள் உள்ள தெய்வாம்சத்தை உபயோகத்துக்குக் கொணர்ந்து, கஷ்டங்களைச் சகித்து, கொடுமைகளை பயனறச் செய்கிறான். தெய்வ நம்பிக்கையை ஆயுதமாக ஏந்தி அநியாயத்தை வெல்ல சாத்வீகப் போர்வீரன் களிப்புடன் சமரில் ஈடுபடுகிறான்.''

காந்தியும் காங்கிரசும் ஏகாதிபத்தியவாதிகளை சாத்வீக முறையில் எதிர்ப்பதாக வேஷங்கட்டி ஆடிய நாடகத்தைக் கண்டு மக்கள் மயங்கிவிடவில்லை. சாத்வீக முறையின் கட்டுதிட்டங்களை உடைத்தெறிந்துவிட்டு நேரிடையாக ஆயுதந்தாங்கிய நடவடிக்கையில் ஈடுபட்டனர். வங்கத்தில் மித்னாபூர் விவசாயிகள் நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளைச் சூறையாடினர். அன்றைய சென்னை ராஜதானியில் இருந்த குண்டூர் விவசாயிகள் 1922-ல் நிலப்பிரபுக்களுக்கு எதிராக வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினர்.

## கை கொடுத்து காலை வாரிய காந்தி

வரி கொடா இயக்கம் என்பது காந்தியின் வார்த்தைகளில் அரசுக்கு வரி கொடுக்காமல் இருப்பதாகும். ஆனால் விவசாயிகளோ தங்களைச் சுரண்டிக் கொழுக்கும் பண்ணையாளர்களுக்கும் வரி கொடுக்க மறுத்தனர். இதைக் கேட்டவுடன் காந்தி துடிதுடித்து ''எல்லா வரிகளும் ஜனவரி 22க்குள் கட்டப்பட்டு விட்டன என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைவேன்'' என்று ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு எழுதினார்.

உக்கிரமான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள்பால் மக்கள் ஈர்க்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே காந்தியும் காங்கிரசும் திட்டமிட்டு அகிம்மை வழி, ஒத்துழையாமை என நடத்திய கண்துடைப்புப் போராட்டங்களே கூட ஏகாதிபத்திய எஜமானர்களைப் பாதிக்கும் அளவு நடைபெற்றன. பிப்ரவரி 1922ல் காந்தியின்

www.padippakam.com

ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றி வைசிராய் பின்வருமாறு லண்டனுக்குச் செய்தி அனுப்பினான்.

"நகர்ப்புறங்களில் கீழ்த்தட்டு வர்க்கங்கள் ஒத்துழையாமை இயக்கத்தினால் மிகவும் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். சில பகுதிகளில், குறிப்பாக அஸ்ஸாம், ஐக்கிய மாகாணம், வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளில் விவசாயிகள் பெருமளவு கலந்து கொள்கின்றனர். பஞ்சாபைப் பொருத்தவரை அகாலிகள் போராட்டம் கிராமப் புற சீக்கியர்களைத் தழுவியுள்ளது. நாடு முழுவதும் முகமதிய ஜனத்தொகையில் பெரும் பகுதியினர் பிரிட்டிஷார் மீது வெறுப்பும் சலிப்பும் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் நடந்ததைவிட மிகப் பயங்கரத் தன்மை வாய்ந்த ஒரு குழப்ப நிலைக்கு இந்திய அரசு ஆயத்தமாகியுள்ளது."



இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் காந்தி ஆங்கிலேயே ஏகாதிபத்தியத் திற்குக் கை கொடுத்தார். ஒத்துழையாமை தனது கையை விட்டு நழுவதைக் கண்ட காந்தி அதை வாபஸ் வாங்க சரியான தருணத்தையும் காரணத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார். 1922 பிப்ர வரியில் வங்கத்தில் சௌரிசௌரா விவசாயிகள், தங்களது அமைதியான ஊர்வலத்தின் மீது தாக்குதல் தொடுத்து கண்மூடித்தனமாக துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்த போலீசாரைத் திருப்பித் தாக்கினர். போலீஸ் நிலையத்திற்கு தீ வைத்தனர். 22 போலீஸ்காரர்களைக் கொன்றொழித்தனர். உடனே காந்தியார், மக்கள் வன்முறையில் இறங்கிவிட்டதாக காரணங்காட்டி ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ் வாங்கினார்; போராட்டத்தின் காலை வாரினார்.

1922 பிப்ரவரி 12ம் நாள் அவசர மாகக் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி சௌரிசௌரா விவசாயிகள் "மனிதத் தன்மையற்ற முறையில்" நடந்து கொண்டதா கச் சாடியது. "வன்முறை நிகழ்ச்சிகள் நடப்பதாலும், நாடு போதுமான அளவு அகிம்சை வழியில் இல்லை என்பதாலும் போராட்டம் நிறுத்தப்படுவதாக" அறிவித் தது. அது மட்டுமா? "அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிபாக்கிகளைச் செலுத்



படிப்பகம்

துமாறு'' ஆணையிட்டது. மக்கள் போராட்டங்களைக் காட்டிக் கொடுக்கும் துரோகிக ளிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

1922 நெருக்கடி பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கருத்தும், காந்தி இயக்கத்தை வாபஸ் பெற்று தங்களைக் காப்பாற்றினார் என்ற கண்ணோட்டமும் அப்போதைய பம்பாய் கவர்னரான லாயிட் பிரபு அளித்த பேட்டி ஒன்றில் வெளிப்படுகிறது.

''அவர் (காந்தி) எங்களுக்கு பெரும் திகில் உண்டாக்கி விட்டார். அவருடைய வேலைத் திட்டம் எங்கள் சிறைகளை நிரப்பி விட்டது. மக்களை எப்போதும் கைது செய்து கொண்டே இருக்க முடியுமா என்ன? அதுவும் 3,19,000 பேர்களை! அவர் அடுத்த படியேறி வரி கொடுக்க மறுத்திருந்தால் எங்கள் கதி என்ன ஆகியிருக்கும் என்று ஆண்டவனுக்கே தெரியும்.''

''உலக வரலாற்றிலேயே காந்தியின் சோதனை மிகப் பிரமாண்டமானது. அது வெற்றிக்கு ஓரங்குல தூரத்தில் வந்துவிட்டது. மக்கள் வன்முறையில் இறங்கினார்கள். காந்தி வேலைத் திட்டத்தை வாபஸ் வாங்கினார். நாங்கள் அவரைச் சிறையிலிட்டோம்.''

(ட்ரூ பியர்சனுக்கு அளித்த பேட்டி, ஆர்.பி.தத் எழுதிய 'இன்றைய இந்தியா' எனும் நூலில், பக்.435)

அகிம்சையும், ஒத்துழையாமையும் காலனிய அடிப்படையைத் தகர்க்கும் போராட்டங்கள் எனக் கொள்ள முடியுமா? முடியாது. ஆயின் இதன் உண்மை நோக்கம் என்ன? போராட்ட உணர்வுகள் பொங்கி எழுந்து காலனிய ஆட்சியின் அடிப்படையை ஆட்டங்காணச் செய்யும் போதெல்லாம் அதை திசை திருப்ப ஆடிய நாடகங்களே இவைகள். பிரிட்டிசாரின் ஒத்துழைப்போடு காந்தி தயாரித்தளிக்கும் நாடகங்கள் கவர்ச்சிகரமான முறையிலே வானொலியிலும், பத்திரிக்கைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டு மக்களை தன் பக்கம் இழுத்துக் கொண்டது என்பதுதான் உண்மை.

பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்க மறுப்பதை ஏகாதிபத்திய எதிர்ப்பு என மக்கள் புரிந்து கொண்ட அளவில் அது எப்போதுமே வன்முறையை எட்டிவிடும். மக்களைத் தழுவிய இந்த இயக்கங்கள் காந்தியின் கட்டு திட்டங்களை மீறி கைநழுவும் போது போராட்டம் கடுமையாக ஒடுக்கப்படும். நாடகத்தின் அடுத்த காட்சியாக காந்தி கைது செய்யப்படுவார். உடனே காந்தியின்பால் மக்கள் கவனம் ஈர்க்கப்பட்டு அவருடைய செல்வாக்கு மீண்டும் பெருகும். சிறையிலிருக்கும் காந்தியார் போராட்டங்களை வாபஸ் வாங்கிக் கொள்வார். போராட்டம் 'எல்லை மீறியதை'க் கண்டிப்பார். மக்க ளின் உணர்வுகள் மந்தமாகிப் போராட்டங்கள் பிசுபிசுக்கும். பிரிட்டிஷார் குதூகலிப் பர். மீண்டும் மக்கள் உணர்வு பெற்று போராட்டங்களில் சீறியெழும்போது, பிரிட்டி ஷாரின் ஆசியோடு காந்தி சிறையிலிருந்து விடுதலையாவார். திசை திருப்பும் திருப்ப ணியை தொடங்கி வைப்பார். இப்படித்தான் மக்களை ஏய்க்கும் நாடகத்தை பிரிட்டி ஷாரும் - காந்தியும் - காங்கிரசும் நடத்தி வந்துள்ளனர்.

## நிலப்பிரபுக்களின் தாசன்

காங்கிரசும், காந்தியும் ஏகாதிபத்தியத்திற்கு மட்டும் விசுவாசிகள் அல்ல; நிலப்பி

www.padippakam.com

ரபுக்களுக்கும் சேவகர்களே. ''மன்னர் வாழ்கவே'' என்ற பாட்டை நான் எத்தனையோ தடவை ராகம் போட்டு, வெகு அழகாகப் பாடியிருக்கிறேன்; என்னுடைய நண்பர்களில் பலரையும் பாடச் செய்திருக்கிறேன்'' எனப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் புளகாங்கிதமடைந்து கூறிய காந்தி, தனது ஒத்துழையாமை இயக்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதை குறிக்கோளாகக் கொண்டது அல்ல; அதே சமயம் நிலப்பிரபு வர்க்கத்துக்கு எதிரானது அல்ல என்றும் கூறியுள்ளார். பர்தோலியில் கூடிய காங்கிரஸ் செயற்குழுவின் தீர்மானங்கள் இதுபற்றிய முக்கிய விவரங்களை கொண்டுள்ளன.

பிரிவு - 6: ஜமீன்தார்களுக்கு நிலவரியைக் கொடுக்காமல் விவசாயிகள் நிறுத்தி வைத்திருப்பதானது தீர்மானத்திற்கு எதிரானது என்றும் நாட்டின் மிக நல்ல நலன்களுக்கு ஊறு விளைவிப்பதாகும் என்றும் விவசாயிகளுக்கு அறிவிக்குமாறு காங்கிரஸ் செயற்குழு காங்கிரஸ் ஊழியர்களுக்கும் அமைப்புகளுக்கும் ஆலோசனை கூறுகிறது.

பிரிவு - 7: ஜமீன்தார்களுடைய சட்டபூர்வ உரிமைகளைத் தாக்குவதை காங்கிரஸ் இயக்கம் எந்தவிதத்திலும் தனது நோக்கமாகக் கொள்ளவில்லை என்று ஜமீன்தார்களுக்கு உறுதி அளிக்கிறது.

நிலப்பிரபுத்துவ சக்திகளுக்குக் காங்கிரஸ் எவ்வளவு நாணயமாக சேவை செய்தது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுவதில்லை. சில ஆண்டுகள் கழித்து ஜமீன்தார்கள் குழு ஒன்றுக்குக் கொடுத்த பேட்டியில் காந்தி சொன்னது இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் அமைந்தது.

''சரியான நீதியான காரணமின்றி சொத்து படைத்த வர்க்கங்களிடமிருந்து சொத்துக்களை பறிமுதல் செய்வோர்களில் ஒருவனாக நான் இருக்க மாட்டேன். உங்களுடைய இதயத்தைத் தொட்டு நீங்களாகவே உங்களுடைய சொத்துக்களை தர்மகர்த்தா முறையில் உங்களுடைய விவசாயிகளுக்கு வைக்க வேண்டும் என்பதே எனது குறிக்கோள். வர்க்க யுத்தத்தைத் தடுப்பதற்கு எனது செல்வாக்கின் முழு பலத்தையும் பயன்படுத்துவேன் என்பதைப் பற்றி நீங்கள் உறுதியாக இருக்கலாம்... உங்களிடமிருந்து சொத்துக்களை பறிக்க அநீதியான ஒரு முயற்சி நடந்தால் அப்போது உங்கள் பக்கம் சேர்ந்து கொண்டு இந்த காந்தி போராட்டம் நடத்துவதை நீங்கள் காணலாம்''

(ஐக்கிய மாகாணத்திலிருந்து வந்திருந்த ஜமீன்தார் குழுவுக்கு காந்தி அளித்த பேட்டி (ஜூலை 1934) மராத்தா, ஆகஸ்டு 12, 1934)

ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களுடைய சமூக அடித்தளமாக விளங்கும் நிலப்பிரபுக்களுக்கும் காந்தி எத்தகைய விசுவாசமிக்க அடிமைச் சேவகன் என்பது வெள்ளிடை மலையல்லவா? இத்தகைய துரோகியின் வருகைக்காக நாடு காத்திருந்ததாம்! ''காங்கிரசை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு காந்தியின் வருகை வரை நாடு காத்திருந்தது. அவர் காங்கிரசை சாதாரண மக்களின் கட்சியாக, ஏழை எளியவர்களின் இயக்கமாக மாற்றினார்.'' — ராஜீவ் காந்தியின் மொழியில் ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களுடைய தரகர்களான தரகு முதலாளிகளும், நிலவுடமையாளர்களும் தான் மக்களாக இருக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

## மூக்கில் நாறிய சுயராஜ்ஜியம்!

பிரிட்டிஷாரின் ஒத்துழைப்போடு எவ்வளவு தான் காங்கிரஸ் துரோகமிழைத்த போதும் புரட்சிகரமான நிலைமைகள் முன்னேறுவதைத் தடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட நேரத்தில் காந்தியும் காங்கிரசும் ''அமைதியான வேலைகளை'' கவனிப்பதற்குப் பதிலாக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் எப்போதுமே காலனியாட்சியாளர்களுக்கு உதவி வந்துள்ளனர். 1920-களில் புரட்சிகர நிலைமைகள் திடீரென முன்னேறிய போது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்த காந்தி கூரை மேல் நின்று கொக்கரிக்கும் சேவலாக மாறிவிட்டார். ''1921 இறுதிக்குள் சுயராஜ்ஜியம் அடைந்தே தீருவேன்... சுயராஜ்ஜியத்தை அடையாமல் டிசம்பர் 31, 1921க்குப் பிறகு வாழ்வதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.''

சுயராஜ்ஜியம் என்று காந்தி எதைச் சொன்னார்? ''முடிந்தால் ஆங்கிலேய பேரரசுக்குள் ஒரு சுயாட்சி. அவசியமேற்பட்டால் அதற்கு வெளியே.'' — இது ஆங்கிலேயே ஏகாதிபத்தியத்திடமிருந்து, அதன் ஒடுக்கு முறையிலிருந்து விடுதலையும், தேசிய சுதந்திரத்தையும் குறிப்பதாகக் கொள்ள முடியுமா?

அகமதாபாத்தில் 1921-ல் நடந்த காங்கிரஸ் கூட்டத் தொடர் இதற்கான விடையைக் கொடுத்தது. அந்தக் கூட்டத் தொடரில் ஹஸரத் மொஹானி என்பவர் கொண்டு வந்த தீர்மானத்தில் சுயராஜ்ஜியம் என்பதற்கு ''முழுச்சுதந்திரம்; எல்லா வெளிநாட்டுக் கட்டுப்பாடுகளிலிருந்தும் சுதந்திரம்'' என்று விளக்கம் கொண்டிருந்தார். அதைக் கடுமையாக விமர்சித்த காந்தி, ''ஹஸரத்தின் தீர்மானத்தில் பொறுப்புத் தன்மை குறைவாக இருப்பது எனக்கு சங்கடத்தை ஏற்படுத்துகிறது. தன்னுடைய தீர்மானத்தின் மூலம் அவர் ஆழம் தெரியாத தண்ணீருக்குள் நம்மை இழுத்துச் செல்கிறார்; ஆழம் தெரியாத தண்ணீருக்குள் நாம் போக வேண்டாம்'' எனக் கூறினார்.

இந்த இடத்தில் 1918-ல் இந்திய அரசாங்க கூட்டத்தைத் துவக்கி வைத்து ஆங்கிலேயே அரசன் பேசியதை நினைவுப்படுத்துவது சரியாக இருக்கும். அவன் சொன்னான்:''பல ஆண்டுகளாக ஏன், பல பல பரம்பரைகளாக தேசபக்த இந்தியர்கள் சுயராஜ்ஜியக் கனவு கண்டு வந்திருக்கிறார்கள். இன்று நீங்கள் என்னுடைய பேரரசின் கீழ் சுயராஜ்ஜியத்திற்கான ஆரம்பத்தைப் பெறுகிறீர்கள்.'' என்ன ஒற்றுமை! காந்தியார் கனவை அவன் எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டான்.


நாடெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டங்களும் பல்கிப் பெருகி மக்கள் தங்களைத் தியாகத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்த போது, காந்தியும் காங்கிரசும் இப்படிப்பட்ட கோரிக்கைகளையும் போர்க் குணமற்ற போராட்ட முறைகளையம் அறிவித்து மக்கள்திரளை இதை நோக்கி திசை திருப்பி ஏகாதிபத்தியங்களுக்குத் தங்களாலான உதவிகளையெல்லாம் முடிந்த வரை செய்தனர். 1921 ஒத்துழையாமை இயக்கம் இவர்களின் கட்டுப்பாட்டை மீறி இறுதியில் வன்முறையில் திரும்பியவுடன் ''சுயராஜ்ஜியம் என் மூக்கில் நாறுகிறது'' என்று காந்தி அரற்றினார்.

1918 முதல் 1922 காலம் வரை மிகப்பரந்த நமது இந்திய பூமியில் புரட்சிகரப் போராட்டங்களும், ஆயுதந் தாங்கிய போராட்டங்களும் எல்லா வர்க்கங்களையும் உலுக்கி ஈர்த்துக் கொண்டது. நாட்டின் மூலை முடுக்குகளில் இருந்தவர்கள் கூட



படிப்பகம்

www.padippakam.com



போராட்டங்களிலே ஈடுபட்டனர். ஆனால் காங்கிரஸ் தலைமை இப்போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்து பலவீனமடைய வைத்தது. மக்களுடைய தன்னெழுச்சியான போராட்டங்கள் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்க முடியவில்லை.

இத்தகைய கால கட்டங்களில் ஏகாதிபத்தியம் அடக்குமுறையை நடத்திக் கொண்டே, இன்னொரு புறம் சட்டமன்றத் தேர்தல்கள் (நவ.1926) போன்ற முறைகளையும் கையாண்டது. காங்கிரஸ் தலைமையில் மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ் ஆகியோர் 'சுயராஜ்ஜிய கட்சி' என்ற ஒரு பிரிவை அமைத்து தேர்தலில் போட்டியிட்டனர். மத்திய சட்டமன்றத்தில் சுயராஜ்ஜிய கட்சித் தலைவராக அமர்ந்த மோதிலால் நேரு, தாங்கள் சட்டமன்றத்திற்கு வந்தது பிரிட்டிஷாருக்கு ஒத்துழைப்பு கொடுப்பதற்குத்தான் என்றும் தங்களுடைய ஒத்துழைப்பை ஆங்கில ஏகாதிபத்தியம் ஏற்றுக் கொண்டால் சொல்லாலும் செயலாலும் அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் மனிதர்களாக இருப்பார்கள் என்றும் புரட்சிகர இயக்கத்தை தடுத்து நிறுத்த தங்களால் இயன்றதனைத்தையும் செய்வோம் என்றும் பிரகடனப்படுத்தினார்கள்.

காங்கிரஸ் தலைமையில் உள்ள எந்த நபருக்கும் சரி, அவர்களுக்குத் தெளிவான ஒரு குறிக்கோள் இருந்தது. அது நாடு முழுதாக சுதந்திரம் அடைந்து விடக்கூடாது; ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும், அதை விரட்டியடிக்கும், உண்மையான விடுதலையின் மீது பற்று கொண்ட அமைப்புகளை ஒழித்துக் கட்டுவது என்பதுதான். காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கம் மக்களிடையே அம்பலப்பட்டுப் போனதால் மாணவர் - இளைஞர்களின் கவனம் புரட்சிகர அமைப்புகளின் மீது படரத் தொடங்கியது. அனுசீலன் சமதி, இந்துஸ்தான் குடியரசுப் படை, நவஜவான் பாரத சபை, பஞ்சாப் கிருதி கிசான் கட்சி என புரட்சிகர இளைஞர், மாணவர் அமைப்புகள் தோன்றின.



படிப்பகம்

1928-ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் 3,16,77,000 வேலை நாட்களை உள்ளடக்கிய வேலை நிறுத்த இயக்கங்களில் ஈடுபட்டனர். வங்காளத்தைச் சேர்ந்த கிஷோர் கன்ஜ் பகுதியிலும், பீகாரை சேர்ந்த புட்டானா பகுதியிலும் உழவர்கள் நிலப்பிரபுக்களையும் காலனி ஆட்சியாளர்களையும் எதிர்த்து ஆயுதமேந்திப் போராடினர்.

## அகிம்சையின் நோக்கம்

ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மக்கள் போராட்டங்கள் வளரத் துவங்கியதும் காங்கிரஸ் மீண்டும் ஒத்துழையாமை எனக் கூச்சலிடத்துவங்கியது. அகிம்சைவழி என அரற்றியது. உண்மையிலேயே காந்தியினுடைய அகிம்சைத் தத்துவத்தின் நோக்கம் என்ன? கத்தியின்றி ரத்தமின்றி போராடுவதன் உள்ளடக்க கூறுகள் என்ன?

அகிம்சை என்றால் என்ன என்பதைப் பற்றி காந்தி கூறுவதைக் கேளுங்கள்: "அக்கிரமம் செய்கிறவனைத் துன்புறுத்துவதற்காகத்தான் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்பது என் கருத்து. பலாத்காரத்துடன் கூடிய ஒத்துழையாமை இயக்கத்தினால் அக்கிரமங்கள் அதிகரிக்கும் என்பதையும், அக்கிரமங்கள் ஒழிய வேண்டுமானால் முற்றிலும் அகிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் நான் இந்திய மக்களிடையே பிரச்சாரம் செய்ய விரும்புகிறேன். அகிம்சை என்றால் துன்பங்களுக்குத் தானாகவே கீழ்படிதலாகும்." துன்பங்களுக்கு தானாக கீழ்படியும் அகிம்சையின் நோக்கம் என்னவாக இருக்க முடியும்?

1930-ல் வைசிராய்க்கு காந்தி எழுதிய கடிதத்தில் அகிம்சையின் நோக்கம் தெளிவாக வெளிப்படுகிறது. தமது இயக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து துவக்கப்பட்டது அல்லவென்றும், இந்திய புரட்சி இயக்கத்தை எதிர்த்தே அது துவக்கப்பட்டதென்றும் அவர் தெரிவித்தார். கடிதத்தில் பின்வருமாறு எழுதினார்: "வன்முறைக் கட்சி வலிமைபெற்று வருகிறது; அதை நன்றாக உணர முடிகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் அமைப்பு ரீதியாக திரட்டப்பட்ட வன்முறையை எதிர்த்து நிற்பது போலவே, வளர்ந்து வரும் வன்முறைக் கட்சியின் அமைப்பு ரீதியாக திரட்டப்படாத வன்முறையை எதிர்த்தும் சக்தியை (அகிம்சையை) இயக்குவது எனது நோக்கமாகும். வெறுமனே கைகட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருப்பது மேற்கூறப்பட்ட இரு சக்திகளுக்கும் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பளிப்பதாகும்!"

ஆக்கிரமிப்பாளனையும், ஆக்கிரமிக்கப்பட்டவனையும் ஒரே நிலையில் வைப்பதன் மூலம் ஆக்கிரமிப்பாளனுக்குச் சேவை செய்தார் காந்தி. "அகிம்சையினின்று மயிரளவு பிறழ்ந்து வெற்றி பெறுவதைவிட, ஊறுபடாத அஹிம்சையோடு படு தோல்வி அடைவதையே நான் வரவேற்பேன்" என ஒருமுறை "தி டைம்ஸ்" என்ற ஏட்டிற்குப் பேட்டியளித்தார். அரசு எந்திரத்தின் அநியாய வன்முறையை எதிர்த்து மக்கள் நியாயமான வன்முறையைப் பிரயோகிக்கக் கூடாது என்பதுதான் காந்தியாரின் அகிம்சைத் தத்துவம்.

## மகான் அல்ல; மக்கள் விரோதி!

வடகிழக்கில் சிட்டகாங் நகரிலும், மேற்கில் பெஷாவரிலும் போர்குணமிக்க போராட்டங்கள் இந்நாட்களில் (1930) தோன்றின. சிட்டகாங்கில் புரட்சிகர மாணவர்

www.padippakam.com

இயக்கங்ளைச் சார்ந்த இந்துஸ்தான் குடியரசுப் படையினர் பிரிட்டிஷ் ஆயுதக் கிடங்கை சூறையாடினர். பெஷாவரில் பத்தானியர்களுக்கும் போலீசாருக்கும் துப் பாக்கிச் சண்டை நடந்தது.

முழு எதிர்காலத்துக்கும் மிகப் பொருட் செறிவுள்ள நிகழ்ச்சி, பெஷாவரில் நடந்த கார்வாலிப் படைவீரர்களின் கலகமாகும். களத்திலிருந்த தலைவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற மக்களின் ஆர்பாட்டங்களை அடக்குவ தற்கு இராணுவம் அனுப்பப்பட்டது. ஒரு இராணுவ ஆயுத வண்டி எரிக்கப்பட்டது. அதில் இருந்தவர்கள் தப்பிவிட்டார்கள். அதன் பேரில் கண்மூடித்தனமாக கூட்டத்தின் மீது இராணுவம் சுட்டது. நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். பதினெட்டாவது அரசு கார்வாலித் துப்பாக்கி படையின் இரண்டாம் அணியின் ஒரு பிரிவினர் — எல்லோ ரும் இந்துக்கள், கூட்டத்தினர் முஸ்லீம்கள் — ஆணையை மீறிச் சுட மறுத்து விட்ட னர். அணியிலிருந்து விலகி கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டனர். சிலர் தங்கள் ஆயுதங்களையும் கொடுத்து விட்டனர். உடனே அங்கிருந்த இராணுவமும் போலீசும் முற்றிலும் பின்வாங்கப்பட்டன. ஏப்ரல் 25 முதல் மே 4 வரை பெஷாவர் நகர் மக்கள் வசம் இருந்தது. மிகப்பெரிய பிரிட்டிஷ் படையையும், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலையும் கொண்டு அந்நகரம் அரசினால் பின்னர் கைப்பற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி 'அகிம்சா மூர்த்தி' காந்தியார் கூறிய கருத்துக்கள் அவருடைய அகிம்சைத் தத்துவத்தின் உண்மைச் சொரூபத்தை உலகுக்கு நன்கு அம்பலப்படுத்தியுள்ளது. தீரமிக்க கார்வாலிப் படைவீரர்கள் மக்களைச் சுட மறுத்த 'அகிம்சை' செயலுக்காக கார்வாலிப் படை வீரர்களை காந்தியார் கண்டித்தார்.

''சுடுமாறு ஆணையிடப்பட்ட படைவீரன் அதற்கு கீழ்படிந்து நடக்க மறுத்தால், அவன் தான் செய்த பிரமாணத்துக்கு எதிராக நடப்பதோடு, கீழ்பணிய மறுத்த பெரும் குற்றமும் செய்தவனாவான். அதிகாரிகளையும், வீரர்களையும் கீழ்பணிய மறுக்கு மாறு நான் ஒருபோதும் கூறமாட்டேன். ஏனெனில் நான் அதிகாரத்தில் இருக்கையில் அதே அதிகாரிகளையும் படை வீரர்களையும் பயன்படுத்திக்கொள்ள நேரலாம். கீழ்ப்படிந்து நடக்க மறுக்குமாறு நான் அவர்களுக்குக் கற்பித்தால், அதே மாதிரி நான் அதிகாரத்தில் இருக்கும் போதும் செய்யக்கூடும் என அஞ்சுகிறேன்.''

(பிரெஞ்சுப் பத்திரிகையாளர் சார்லஸ் பெட்ராஷ் கார்வாலி படைவீரர்களைப் பற்றி கேட்ட கேள்விக்கு காந்தியின் பதில்; மாண்ட், பிப்ரவரி 20, 1932)

இரண்டாம் உலகப்போரின் போது அட்டூழியங்கள் புரிந்த நாஜிகள் மீது நியூரம் பர்க் எனுமிடத்தில் சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்தியபோது நாஜிகள் சாராம் சத்தில் காந்தியின் வாதத்தைதான் முன்னிறுத்தினர். ''நாங்கள் குற்றவாளிகள் அல்ல; ஏனெனில் மேலதிகாரிகள் உத்தரவைத்தான் நாங்கள் நிறைவேற்றினோம். அவர்கள் போடும் உத்தரவை நிறைவேற்றுவோம் என்று சபதம் ஏற்றிருக்கிறோம்'' என்றனர். காந்தியின் வார்த்தைப்படி நிச்சயமாக இவர்கள் குற்றவாளிகளல்ல. ஆனால் சர்வதேச நீதிமன்றம் அவர்களுடைய வாதத்தை நிராகரித்து விட்டது. மேலதிகாரிகள் போடும் அக்கிரமமான, அநியாயமான சட்டவிரோதமான உத்தரவுகளைச் சிப்பாய்கள் நிறை வேற்ற வேண்டியதில்லை. அது மட்டுமல்ல; அதை நிறைவேற்றுவதும் ஒரு குற்றமா கும் எனத் தீர்ப்புக் கூறியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



நியூரம்பர்க் நீதிமன்றத் தீர்ப்பையும் காந்தியின் தீர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்த்தால், காந்தியின் நயவஞ்சகத் துரோகம் அப்பட்டமாகத் தெளிவாகிறதல்லவா?

''அரசாங்கத்தைத் தொல்லைப்படுத்த ஒரு சத்தியாக்கிரகி ஒருக்காலும் முயல மாட்டான்'' எனக் கூறிய காந்தி, பஞ்சாபில் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக் படுகொலையின் போது தான் ஒரு மக்கள் விரோதி என்பதை அம்மணமாகக் காட்டிக் கொண்டார். ஜாலியன்வாலாபாக் என்னுமிடத்தில் 20,000க்கும் மேலாக கூடிய அமைதியான மக்கள் கூட்டத்தின் மீது ஜெனரல் டயர் என்பவன் வெறிகொண்டு 1600 முறை சுட்டான். மொத்தம் 379 பேர் இறந்தனர். படுகாயமுற்ற 1200 பேர் இரவு முழுவதும் கவனிப்பாரற்று மைதானத்திலேயே கிடந்தனர். ''கூட்டத்தில் இருந்தோருக்கு மட்டுமல்ல, குறிப்பாக பஞ்சாப் மக்கள் அனைவருக்கும் ஒரு பய உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற இராணுவக் கண்ணோட்டத்தோடு'' தான் சுட்டதாக கூறிய டயர் ''ரவைகள் மட்டும் தீர்ந்திராவிடில் இன்னும் மக்களைச் சுட்டு வீழ்த்தியிருப்பேன்'' எனக் கொக்கரித்தான்.

மிருகத்தனமாக மக்களைச் சுட்டுப் பொசுக்கிய ஜெனரல் டயரை காந்தி ஒருபோதும் கண்டிக்கவில்லை. ஆனால் இந்தப் படுகொலை நடப்பதற்குச் சில நாட்கள் முன்பாக மக்கள் ஒரு சில ஐரோப்பியரை கொன்றதையும் நேஷனல் பாங்க் கட்டிடத்திற்கு தீ வைத்ததையும் கடுமையாகச் சாடினார். அமிர்தசரசு மாநாட்டில் பஞ்சாப் மக்களின் கோபாவேசத்தைக் கண்டித்து தீர்மானம் கொண்டு வந்தார். ஆலோசனைக் கமிட்டி இதை ஏற்க மறுத்தது. ஏமாற்றமடைந்த காந்தி ''மகாஜனங்கள் பாஞ்சால நாட்டில் (பஞ்சாபில்) கோபவேசத்தில் செய்யப் புகுந்த அதிக்கிரமங்களை கண்டிக்க



படிப்பகம்

www.padippakam.com

காங்கிரஸ் மகாசபை இணங்காவிடில் நான் மகாசபையை விட்டு வெளியேறி விடுவேன்'' என்று மிரட்டினார். ''கோபமூட்டப்பட்ட பாஞ்சால ஜனங்கள் செய்த அதிக்கிரமங்களுக்காக மகாசபை மிகுந்த வருத்தமுறுவதாக'' தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது ''இந்த மகாசபை முன் கொணரப்பட்ட தீர்மானங்கள் அனைத்திலும் இதுவே தலை சிறந்தது'' என அகமகிழ்ந்து போனார்.

இதுமட்டுமின்றி காந்தியார் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைத்து, அவசர கதியில் வெளியிட்ட அறிக்கையில் இப்படிக் கூறினார்:''நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். மேலும் சர்க்கார் பாஞ்சால விசாரணைக்காக ஒரு கமிஷன் நியமனமாகிக் கொண்டிருக்கிறது என அறிவிக்கிறார்கள். சர்க்கார் இவ்வளவு நல்ல மனப்பான்மையுடன் இருக்கும் போது நான் அவர்கள் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் காரியத்தில் இறங்குவது தவறு... சாத்வீகப் போரில் ஈடுபட்டவன் சர்க்காரை சங்கடத்துக்கு உள்ளாக்க மாட்டான்.''

அகிம்சை என்பதின் மெய்ப்பொருள் இங்கே அப்பட்டமாக புலப்படுகிறதல்லவா? ஏகாதிபத்தியத்திற்கு பயன்படுவதாயிருந்தால் துப்பாக்கி சாத்வீகமானது, தூய்மையானது; ஆனால் அதுவே மக்களின் கையில் பயன்பட்டால் அது வன்முறை; அராஜகம். இதுதான் காந்தியின் அகிம்சைத் தத்துவம். ஏகாதிபத்தியம், தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்களின் அரசியல் பிரதிநிதி வேறு எப்படிக் கூறுவார்?



## பகத்சிங்கின் தூக்கும் காந்தியின் துரோகமும்

லாகூர் சதிவழக்கு சம்பந்தமான தீர்ப்பில் காந்தி நடந்து கொண்ட விதம், பிரிட்டிஷ் அரசோடு கள்ளக் காதல் கொண்டு உறவாடிய விசயங்கள் ஆகியவை சமீபகாலத்தில் கூட அம்பலமாகியுள்ளது. மத்தியப் பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசியதற்காகவும், லாலா லஜபதிராயை அடித்துக் கொன்ற பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரி சாண்டர்சை சுட்டுக் கொன்றதற்காகவும் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய தோழர்களுக்கு லாகூர் சிறைச்சாலையிலே தூக்கு தண்டனை காத்திருந்தது. இதே நேரத்தில் 1931-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காலனி ஆட்சியின் தலைவனான இர்வின் என்பவனுக்கும் காந்திக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது (காந்தி - இர்வின் ஒப்பந்தம்).

இவ்வொப்பந்தப்படி, 'சுயராஜ்ஜியம்' சம்பந்தமான சில ஷரத்துக்களையும், 'இந்தியாவின் நலன்களுக்கு பாதுகாப்பான ஒதுக்கீடுகள்' எனச் சில்லறைச் சீர்திருத்த ஒப்பந்தங்களும், காந்தியை பின்பற்றி சிறை சென்றவர்களுக்கு பொது மன்னிப்பும் வழங்கப்பட்டது. ஆனால் புரட்சியாளர்கள் ஒருவர் கூட விடுதலை செய்யப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஒப்பந்தம் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் மரண தண்டனை பற்றி மௌனம் சாதித்தது. மாறாக பலாத்கார குற்றங்களுக்காகவும், பலாத்காரத்தைத் தூண்டிய குற்றத்திற்காகவும் தண்டிக்கப்பட்டவர்கள் யாரும் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என ஒப்பந்தம் திட்டவட்டமாக கூறியது. அது மட்டுமின்றி, பெஷாவரில் மக்களைச் சுட மறுத்ததற்காக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த கூர்க்காப் படையினர் எந்த பலாத்காரத்திலும் இறங்கவில்லை. அவர்கள் காந்தி கூறிய அகிம்சைத் தத்துவத்தைத்தான் கடைப்பிடித்தனர். ஆனால் அவர்களுடைய விடுதலைக்கு இந்த ஒப்பந்தத்தில் ஏதுமில்லை. காந்தி இதுபற்றிய கோரிக்கை கூட எழுப்பவில்லை.

பகத்சிங் மற்றும் தோழர்கள் தூக்கிலிடப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்பு காந்தி வெளிநாட்டு நிருபர்களுக்கு பேட்டியளித்தார். "பகத்சிங் மீதும் இதரர் மீதும் விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படுமா?" என ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு "என்னை இக்கேள்வி கேட்காதிருப்பதே மேல். இதற்கு மேல் நான் ஒன்றுங் கூறமுடியாது" எனக் கூறிய காந்தி அந்த ஒப்பந்தம் போடப்பட்ட முறையைப் பற்றி ரொம்பவும் சிலாகித்துப் பேசினார். "முதலாவதாக, வைசிராயின் விசேஷப் பொறுமையும், அளத்தற்கரிய உழைப்பும், சிறந்த குணமும் இன்றி இவ்வொப்பந்தம் முடிந்திருக்க மாட்டாதென நான் கூற விரும்புகிறேன்... இதுபோன்ற ஒப்பந்தத்தைப் பற்றிய வரையில் வெற்றியடைந்த கட்சி எதுவெனக் கூறவும் முடியாது. கூறுவதும் சிறந்ததன்று. எதாவது வெற்றியிருக்குமாயின் அது இருவரையும் சார்ந்ததே. காங்கிரஸ் ஒருபோதும் வெற்றியை நினைத்ததில்லை." ஆம்; பிரிட்டிஷ் நலனோடு சாராத வெற்றியை இவர்கள் ஒருபோதும் நினைத்ததில்லைதான்!

காந்தி - இர்வின் காகித ஒப்பந்தங்களின் ஷரத்துக்களைக் கண்ட பஞ்சாப் மக்களும், ஏனைய இந்திய மக்களும் கொதிப்படைந்திருந்தனர். கராச்சியில் காங்கிரஸ் மாநாடு கூடும் அதே நாளில் பகத்சிங் லாகூர் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார். ஆத்திரமுற்ற மக்கள் திரளிடமிருந்து காந்திக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் கிளர்ந்தெழுந்தன. ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் கலந்துக் கொண்டனர். "பலர் அதன் தவறான அம்சங்களைக் கண்டித்தனர். மேலும் தனிநபர் பயங்கர வாதத்தைக் கொண்டு காந்தியை அச்சுறுத்தினர்" என இர்வினுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் குறிப்பிடுகிறார். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் மரண தண்டனை விஷயத்தில் காந்தியாரின் பங்கை மக்கள் நன்றாகவே அறிந்திருந்தனர். "மக்கள் காந்தியை உடனடியாக ஒழித்துக்கட்டி, பலாத்காரமாக நசுக்க ஆயத்தமாயிருந்தனர்" என இர்வின் குறிப்பிட்டுள்ளார்.

(Earl of Birhenhead P. 305)

*மக்களுடைய அறியாமையைப் பயன்படுத்தி அதன் மேல் சவாரி செய்து கொண்டிருந்த காந்தியை, அதே மக்கள் பலாத்காரமாக நசுக்கி எறியும் அளவுக்கு சென்றுள்ளார்கள் என்றால் காந்தி எத்தகைய துரோகியாக இருந்திருக்க வேண்டும். 1922 ஒத்துழையாமை இயக்கம், 1931 காந்தி - இர்வின் ஒப்பந்தம் — இவற்றின் மூலம் செய்த துரோகத்தை காட்டிலும், பின் நாட்களில் காந்தி செய்த துரோகம் என்றென்றும் ஏகாதிபத்திய அடிமை நாடாய் இந்தியா இருப்பதற்குப் பலமான கால்கோலாய் அமைந்து விட்டது.*



படிப்பகம்

www.padippakam.com

## ஏகாதிபத்தியங்களுக்குப் பாதபூஜை

இரண்டாம் உலகப் போரின் போது வெள்ளை ஏகாதிபத்தியம் தனது போர் நடவடிக்கைக்கு எதிராகக் கிளம்பிய ஒவ்வொரு எதிர்ப்பையும் நசுக்கியது. ஒடுக்கு முறையை மட்டுமே நம்பியிருக்காமல் போருக்குப் பின் அரசியலதிகாரத்தை இந்தியர் களின் கைக்கே மாற்றி விடுவது என்ற மாயையை மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு கிரிப்ஸ் கமிஷன் போன்ற தூதுக் குழுக்கள் மூலம் அரசியல் மோசடி மூட்டைகளை அவிழ்த்து விட்டது.

காந்தியும் நேருவும் ஜின்னாவும் பிரிட்டிஷாருக்கு நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்தனர். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருந்த ஒரு பிரிவு, சுபாஷ் போஸ் தலைமையில் பாசிச ஜெர்மானிய - ஜப்பானிய முகாமை ஆதரித்து பிரிட்டிஷாரை எதிர்த்தது. தனது முழு ஆதரவையும் பிரிட்டனுக்குத் தெரிவிக்க காந்தி வைசிராயைச் சந்தித்தார். பின்னர் அதைப்பற்றிப் பின்வருமாறு எழுதினார்: ''நான் அவருக்கு (வைசிராய்க்கு) பிரிட்டிஷ் பாராளுமன்றமும் அமைச்சரவைத் தலைமையகமும் அழிக்கப்படக் கூடிய வாய்ப்பு பற்றிய சித்திரத்தை விளக்கிய போது நான் நெஞ்சுரு கிப் போனேன்.'' (செப். 5, 1939).

எப்படிப் பாருங்கள்! யுத்தத்தின் காரணமாக இந்திய மக்கள் கொடூரமாக அடக்கி ஒடுக்கிச் சுரண்டப்படுவதைக் காட்டிலும் இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்றம் அழிந்து போய்விடலாம் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்கையிலே அழுது விட்டா ராம்! காந்தியின் இதயத்தில் பிரிட்டன் கட்டிடங்கள் பெற்ற இடத்தைக்கூட இந்திய நாட்டு மக்கள் பெறவில்லைதான்!

இந்த காலகட்டங்களில் காங்கிரஸ் கட்சி யுத்தத்தை எதிர்த்தோ அல்லது சுதந்திரத் திற்காகவோ ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடவில்லை. ''பிரிட்டன் ஜீவமரண போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அதை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்குவது இந்தியாவின் கௌரவத்திற்கே இழிவு ஏற்படுத்தும் செய லாகும்.'' - 'மனிதருள் மாணிக்கம்' நேருவின் 'மனித நேயத்தை' எடுத்துக் காட்டும் சொற்கள் தான் இவை.

இதே நேரத்தில் காந்தி ''நாங்கள் பிரிட்டனுடைய அழிவிலிருந்து எங்களது சுதந்திரத்தைத் தேடவில்லை'' என்று அறிவித்தார். அதுமட்டுமின்றி பிரிட்டன் ஒரு நியாயமான லட்சியத்திற்காகப் போராடுவதாகவும், அதற்கு இந்தியா நிபந்தனை யற்ற ஒத்துழைப்புத் தரவேண்டும் எனவும் அறிவித்தார்.

''ஆகையால் நான் இப்போது இந்தியாவின் விடுதலையைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கவில்லை. அது கட்டாயம் வரும். ஆனால் இங்கிலாந்தும், பிரான்சும் வீழ்ந்து விட்டால் என்ன ஆகும்?''

(ஹரிஜன், செப். 9, 1939)

காந்தியாரின் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்துக்கு இதைவிட தெளிவான எடுத் துக்காட்டு தேவையா? காந்தியும் காங்கிரசும் பிரிட்டிஷ் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு நல்கியபோதிலும் யுத்தத்தின் போக்கு இவர்களை யோசிக்க வைத்தது. திடீரென 'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்குமளவு அவர்களைத் தூண்டி



படிப்பகம்

www.padippakam.com




யது. இந்த முழக்கத்தைக் கொண்டு காந்தியாரை தேச பக்தன் என்று எவராவது கூறினால் அது ஒன்று, அவரது அறியாமையாக இருக்க வேண்டும்; இல்லையெனில் நம்மை ஏமாற்ற கூறப்பட்டவையாக இருக்க வேண்டும்.

ஏன்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அழிவைக் கண்டஞ்சி கண்ணீர் சிந்திய 'தேசத் தந்தை,' உலகப் போரின் ஒரு கட்டத்தில் பாசிச ஜெர்மானிய - ஜப்பானிய முகாமின் விரைவான வெற்றியைக் கண்டு இந்திய நாடு அவர்களின் கைக்கு மாறிவிடும் எனக் கணித்தார். உடனே பிரிட்டிஷ் எதிர்ப்பாளராக மாறிவிட்டார். ஒருவரோடு ஒருவர் முரண்பட்டு நின்ற காந்தியும் சுபாஷ் போசும் இப்போது ஒருவரையொருவர் புகழ்பாடத் தொடங்கினர். பாசிஸ்டுகளை ஆதரிக்கும் நோக்கில் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் துவக்கப்பட்டது. அதே சமயம் நேரு, ராஜாஜி, ஆசாத் போன்றோர் பிரிட்டனே இறுதியில் வெல்லும் எனக் கணித்தனர்.

இந்த ஏகாதிபத்திய நாட்டுப் பற்றாளர்களின் நடவடிக்கைகள் எதை காட்டுகிறது? யார் வெற்றி பெறுவர் என்ற கணிப்பில்தான் அவர்களிடையே கருத்து வேற்றுமையிருந்தது. ஆனால் வெற்றி பெறும் முகாமோடு இந்தியா இருக்க வேண்டுமென்பதில் கருத்து ஒற்றுமையிருந்தது. சத்தியத்தை நாடும் 'உத்தமர்' காந்தி பிரிட்டனைக் கைவிட்டதற்கு காரணம், அது அநீதியான போரில் ஈடுபட்டது என்ற காரணத்தினால் அல்ல; அது தோல்வியைத் தழுவும் என்று எண்ணியதால்தான். 'பாசிசத்தின் மாபெரும் எதிர்ப்பாளன்' நேரு பிரிட்டனை ஆதரித்தார். காரணம், பாசிசத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்ற மகத்தான கொள்கையின் உந்துதலால் அல்ல. பாசிசம் நிச்சயம் தோல்வியைத் தழுவும் என்று அவர் கருதியதால்தான்.

போரின் இறுதியில் பிரிட்டன் வெற்றியையும், ஜெர்மன் தோல்வியையும் தழுவிய போது முரண்பட்டு நின்ற காங்கிரஸ் தலைமை அடுத்த வினாடியே பிரிட்டனை விசுவாசமாக ஆதரித்து நின்றது. வெள்ளையனே வெளியேறு இயக்கத்துக்கும் தங்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை எனப் பத்தினி வேஷம் போட்டனர். காங்கிரஸ் செப். 21, 1945ல் வெளியிட்ட அறிக்கையில், ''அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியாலோ, காந்திஜியாலோ எந்த இயக்கமும் அதிகார பூர்வமாய் தொடங்கப்படவில்லை' ' எனத் தெளிவாகக் கூறியது.



படிப்பகம்

போர் முடிவடையும் தறுவாயில் உலகம் எங்கும் மக்கள் விடுதலையை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தனர். ஆனால் காட்டிக் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டு பிழைப்பு நடத்திய காங்கிரஸ் துரோகிகளின் செய்கைகளால், போரின் தொடக்க காலத்தில் இருந்தது போலவே இந்தியா ஒரு அடிமை நாடாகவே போரிலிருந்து விடுபட்டது.

தெலுங்கானா விவசாயிகளின் புரட்சிகர எழுச்சி, 1946 ஜனவரியில் நடந்த விமானப்படை எழுச்சி, கப்பற்படை எழுச்சி, ஜபல்பூர் ராணுவ முகாமில் மூண்டெழுந்த படை வீரர்கள் கலகம் என ஏகாதிபத்தியத்தைத் தனது பலத்தின் இறுதிவரை சந்தித்த எந்தவொரு எழுச்சியும் காங்கிரஸ் கருங்காலிக் கூட்டத்தின் கயமைத்தனத்தினால் மட்டுமே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

## மக்கள் முதுகில் குத்திய காந்தி

1946 கப்பற்படை எழுச்சியைக் காங்கிரஸ் துரோகிகள் காட்டிக் கொடுத்து இந்திய விடுதலையின் முதுகெலும்பையே முறித்து விட்டனர். தொழிலாளர்களும், மாணவர்களுமாக, 30,000 பேர் பம்பாய் கப்பற்படை கலகத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். வேலை நிறுத்தம் செய்தனர். ஏறத்தாழ 20,000 கப்பற்படை வீரர்கள் செங்கொடி ஏந்தி பம்பாய் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர். "புரட்சி ஓங்குக! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இறந்து படுக!" என விண்ணதிர முழங்கினர். ராயல் இந்தியக் கப்பற்படையின் 20 கப்பல்களை அவர்கள் கையகப்படுத்தி விட்டனர். எல்லா கப்பல்களிலும் காங்கிரஸ், முஸ்லீம் லீக் மற்றும் செங்கொடிகள் இணைந்து பறந்தன. கப்பற்படை வீரர்களை இந்திய ராணுவத்தினர் சுட மறுத்து விட்டனர்.

கப்பற்படையின் கலகத்தை அடக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கையாண்ட மிருகத்தனமான அடக்குமுறைகளை காங்கிரசோ, முஸ்லீம் லீக் தலைவர்களோ ஒரு போதும் கண்டிக்கவில்லை. ஏகாதிபத்திய விசுவாசிகளிடம் அதை நாம் எதிர்பார்க்க முடியாது. மக்களின் தீரமிக்க போராட்டங்களைக் கண்டிக்கும் 'புனிதச் செயல்களை' அவர்கள் ஜுரவேகத்தில் துவக்கினர். அகிம்சா தர்மத்திற்கு மாறாக இந்துக்களும் முஸ்லிம்களும் 'புனிதமற்ற ஒரு கூட்டில்' சேர்ந்தாக மக்களைச் சாடினார் காந்தி.

"நம்முடைய வேலை நிறுத்தம் நம் நாட்டு வாழ்க்கையில் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக இருந்துள்ளது. முதன் முதலாக ஒரு பொது லட்சியத்திற்காக ராணுவத்திலுள்ள மனிதர்களின் ரத்தமும், வீதியிலுள்ள மனிதர்களின் ரத்தமும் சேர்ந்து பெருகின. படையிலுள்ள நாங்கள் ஒருக்காலும் இதை மறக்க மாட்டோம். எங்கள் சகோதர சகோதரிகளான நீங்களும் மறக்கமாட்டீர்கள் என்பதை நாங்களும் அறிவோம். நம்முடைய பெருமக்கள் நீடுழி வாழ்க!" என ஆரவாரமில்லாமல் மக்களிடையே வேண்டுகோள் விடுத்தது, கப்பற்படை வேலை நிறுத்தக் கமிட்டி. அதைக் கைது செய்யவும், கப்பற்படை எழுச்சியை அடக்கவும் "அரசாங்கத்தின் வசமுள்ள அதிகபட்ச சக்தியைப் பயன்படுத்துவேன். இதனால் கடற்படையே அழிந்து போனாலும் சரி" எனப் பிரிட்டிஷ் அட்மிரல் காட்பிரே கடற்படையினரை மிரட்டினான்.

மாபெரும் கப்பற்படை எழுச்சியைக் கண்டு 'மகாத்மா' என்ன செய்தார்? பச்சைத் துரோகத்தனத்தால் முதுகில் குத்திக் கொல்லப்பட்ட அந்த போராட்டத்தின்


சவப்பெட்டிக்கு கடைசி ஆணியை அறைந்தது அவர்தான். அந்தப் போராட்டம் எங்கே வெற்றி பெற்று விடுமோ என குலை நடுங்கினார். ''அந்தப் போராட்டம் வெற்றி பெற்றிருக்குமானால் அது நாட்டை காலிகளின் கையில் கொடுத்திருக்கும். அந்த முடிவைக் காணுவதற்கு நான் 125 ஆண்டுகள் வாழ விரும்பவில்லை. மாறாக தீயில் குதித்து என்னை அழித்துக் கொள்வேன்'' (ஹரிஜன், ஏப்ரல் 2, 1946)- என அரற்றிய காந்தி, போராடும் மக்களைக் 'காலிகள்' என வர்ணித்து மக்கள் விரோத நெருப்பை அள்ளி உமிழ்ந்தார்.

## சுதந்திரம்' - ஒரு கபட நாடகமே!

காங்கிரசும் அதன் தலைமையும் ஒரு போதும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தீர்மானகரமான வெற்றியை விரும்பவில்லை என்பது தெளிவு. ''காலிகளுக்கு'' - அதாவது பரந்துபட்ட மக்களுக்கு எதிராக செலுத்தப்படும் நூற்றாண்டுகால வெள்ளை ஏகாதிபத்திய ஒடுக்குமுறைச் சுரண்டலின் போது கட்டி வளர்க்கப்பட்ட அதிகாரவர்க்க நிர்வாக எந்திரம், போலீஸ், ராணுவம் ஆகியவைகளை அப்படியே எடுத்துக் கொள்ள பெரிதும் விரும்பினர். இந்த அரசு எந்திரம் தகர்க்கப்படுவதை அவர்கள் சிறிதும் விரும்பவில்லை.

புரட்சிகர சக்திகளைக் கண்டு இந்திய முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் அஞ்சியது போலவே தனது மொத்த அழிவைக் கண்டு ஏகாதிபத்தியமும் பயந்தது. இந்திய நிலைமைகளை பலாத்காரத்தைக் கொண்டு இனி கட்டுப்படுத்த முடியாது என்பதை நன்றாக புரிந்து கொண்டது. யுத்தத்தால் சின்னாபின்னப் படுத்தப்பட்டு நிதிப் பற்றாக் குறையின் காரணமாக தடுமாறிய ஆங்கிலேயே ஏகாதிபத்தியம் ராணுவ பலத்தை அதிகரிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது.

''நமது நாட்டின் தொழில் தேவைகளைவிட அதிகமானதாக நமது ராணுவக் கடமை இருந்ததையும், போண்டியாகிப் போன நமது நாட்டின் பலத்தை மீறியதாக இது இருந்ததையும் நாம் இறுதியில் கண்டோம். இந்தியாவை விட்டு வெளியேறியதற்கு, அதிலும் விரைவாக வெளியேறியதற்கு இது மிக முக்கியமான மற்றொரு காரணமாகும்.'' (நினைவிருக்கும் வரை, பக்.518)



www.padippakam.com


*இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கான ஒரு காரணமென அன்றைய கிழக்கிந்திய பிராந்திய தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் சர். பிரான்ஸ்டகர் என்பவன்தான் மேற்கண்டவாறு கூறினான். மற்றொரு காரணத்தை மவுண்ட்பேட்டனின் இந்தியப் படைத்தளபதி லார்டு இஸ்மாய் இப்படிக் கூறுகிறான்.*

''1947 மார்ச்சில் இந்தியா இருந்த நிலைமை, வெடி குண்டுகளால் நிறைக்கப்பட்டு நடுக்கடலில் நிற்கும் ஒரு கப்பலில் தீப்பிடித்துக் கொண்டது போல இருந்தது. நெருப்பு, குண்டுகளை நெருங்குமுன் அதை அணைக்க வேண்டிய பிரச்சினை முன்னே நின்றது. எனவே நாங்கள் செய்ததைத் தவிர வேறு மாற்று செய்வதற்கில்லை

*எனவே சமரசத்திற்கான அவசியம் - இந்தியாவில் தனது அரசியல் அதிகாரத்தை மாற்றிக் கொடுக்க வேண்டிய அவசியம் எழுந்தது. தனது நிதி, தொழில், வணிக, அந்துஸ்துக்களை நிலைநிறுத்திக் கொள்கிற வகையில் தனது சுரண்டல் நீடிக்கும் வகையில் சமரசம் காண வேண்டியிருந்தது. இதனினும் முக்கியமாக நாடு ''காலிகளின்'' கைக்குப் போய்விடாமல் 'காப்பாற்றும்' அவசியமும் முன்னெழுந்தது. தங்களது நம்பிக்கைக்குரிய ஏஜெண்டுகளிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு திரை மறைவில் இருந்து ஆட்டிவைக்கும் வேலையைச் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறுவழியில்லை.*

*''ஏனெனில் முதலாளிகளுக்கு அக்கறையுள்ள விசயம் பொருளாதார ஆதிக்கத்தைப் பெறுவதே. அரசியல் ஆதிக்கத்துக்கான வடிவம் பற்றிய விசயம் அவ்வளவு முக்கியமானதல்ல.''*


*லெனின் கூறிய இவ்வார்த்தைகள் இந்தியாவின் அன்றைய நிலைமைகளுக்கு மிகப் பொருத்தமானது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் திட்டத்தின் ஒரு அங்கமே 'இந்திய சுதந்திரம்'! இந்தியாவில் தரகு முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரசுத் தலைமைக்கு ஆட்சியதிகாரம் கைமாற்றப்பட்டது. கத்தியின்றி ரத்தமின்றி வெட்கமின்றி சமாதானமாக ஆட்சி கைமாறியது.*






படிப்பகம்

www.padippakam.com




யூனியன்ஜாக் கொடி இறக்கப்பட்டது. மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. 'சுதந்திரம்' ஆகஸ்ட் 15 நள்ளிரவில் பிரகடனப்படுத்தப்பட்டது.

இறுதியாக மணப்பெண் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டாள். ஆனால் அவள் ஏற்கனவே ஒரு விபச்சாரியாக ஆக்கப்பட்டு விட்டாள்!

'அரசியல் ரீதியில் சுதந்திரம்' அடையப் பெற்றதென்று கூறப்பட்ட '1947 சுதந்திரமும்', 1950-ல் ஏற்பட்ட 'குடியரசும்' ஏகாதிபத்தியங்கள், தரகுமுதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் சுதந்திரமான சுரண்டலுக்காக ஏற்படுத்தப்பட்ட, அவர்களுக்கு மட்டுமே ஜனநாயகம் கொண்ட ஒரு நாடு தான் இந்தியா.

ஆகஸ்டில் வாங்கப்பட்ட இந்த 'சுதந்திரம்' இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் இறுதி வெற்றி அடைந்ததைக் குறிக்கிறதா? இல்லை. பிரிட்டிஷாரின் தொழிலும், மூலதனமும் நட்ட ஈடின்றி பறிமுதல் செய்யப்பட்டதா? இல்லவே இல்லை. மாறாக, அப்படியே அரவணைக்கப்பட்டு நீடித்து விரிவடைய வகை செய்யப்பட்டது.

1948 ஏப்ரல் 6-ந்தேதி பொருளாதாரக் கொள்கை பற்றிய 'சோசலிச' நேரு அரசாங்கத்தின் தீர்மானம் வெளியிடப்பட்டது. அதில் "அன்னிய மூலதனத்திற்கும் தொழில் நிறுவனத்திற்கும் முழுச் சுதந்திரத்தை இத்தீர்மானம் அளிக்கிறது" என மிகத் தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிட்டிஷாரின் மூலதனம் மட்டுமா தொடர்ந்து நீடித்தது? இல்லை. ஆங்கிலேயப் பேரரசின் அதே கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் 'சுதந்திர' இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நீடித்தான். சீதனமாகப் பெறப்பட்ட பிரிட்டிஷ் - இந்திய ராணுவக் கூலிப்படை அதே பிரிட்டிஷ் ஜெனரல் பௌச்சர் என்பவனின் கீழ் மேலும் இரு ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தது.



படிப்பகம்

இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சி மட்டுமின்றி நீதி, நிர்வாகம், சட்டம், கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளும் ஆங்கிலேயரின் வழிமுறையிலேயே நீடித்து வருகிறது. 1911ம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் இந்தியாவுக்கு வந்தபோது, 'தேசியக் கவிஞன்' என வர்ணிக்கப்படுகின்ற வங்கத்தின் ரவீந்திரநாத்தாகூர் 'மாட்சிமை பொருந்திய' மன்னனை வரவேற்று வாழ்த்துப் பாடிய 'ஜன கன மன' என்ற பாடல் வெட்கமின்றி இந்தியாவின் தேசிய கீதமாக இசைக்கப்பட்டு வருகிறது. பிரிட்டனின் முன்னாள் காலனிய நாடுகளின் கூட்டமைப்பான காமன் வெல்த்தில் இந்தியா இன்னமும் தொடர்ந்து ஒரு உறுப்பு நாடாக இருந்துவருகிறது.

## குழப்பவாதிகள்

1947-ல் 'சுதந்திரம்' வழங்குவது பற்றிக்கூட எச்சில் பொறுக்கும் காங்கிரசுக்கு அதன் எஜமானன் வழி காட்ட வேண்டியிருந்தது. இந்த கேடுகெட்ட சுதந்திரம் எப்படியிருக்கும் என்பது பற்றியோ, எதிர்காலம் பற்றியோ இவர்களால் ஊகிக்கக்கூட முடியவில்லை. இது ஒருபுறமிருக்கட்டும். இதுவரை காந்தியும் காங்கிரசும் முழங்கி வந்த சுயராஜ்ஜியம், சுதந்திரம் இவை எதிலுமே, என்றுமே அவர்களுக்கு ஒருங்கிணைந்த உலகக் கண்ணோட்டமோ, தெளிவோ இருந்தது கிடையாது. காங்கிரசின் போர் முறை தெளிவற்று இருந்தது என்பதை அதிகாரப்பூர்வமான இந்திய தேசியக் காங்கிரஸ் வரலாறே உரைக்கிறது.



www.padippakam.com

''மாபெரும் சட்டபூர்வமான இயக்கம் தான் மக்களைக் கவர்ந்து கொண்டு இருந்தது. என்ன அது, எப்படித்தான் இருக்கும்? காந்தியே அதை விளக்கவில்லை. விரித்துரைக்கவில்லை. தீர்க்தரிசனம் உடையோருக்கு, தூய உள்ளம் படைத்தோருக்கு தானே படிப்படியாக அது விளக்கம் கொள்ளும். — அடர்ந்த காட்டினுள் நடக்கும் பாதசாரியின் கால்களுக்குப் பாதை தானாகத் தென்பட்டு, ஓய்ந்துபோன அவன் கண்களுக்கு ஒளிக்கதிர் ஒன்று தோன்றவும் அவனுக்குப் புதிய நம்பிக்கை உதயமாவது போல.''

(அதிகாரபூர்வமான இந்திய தேசியக் காங்கிரஸ் வரலாறு, 1935. பக். 376)

காந்தி எப்போதுமே தெளிவற்றே இருந்திருக்கிறார் என்பதை சுபாஷ் போஸ் உறுதிப்படுத்துகிறார். ''உண்மையில் அவர் என்ன எதிர்பார்க்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. காலம் கனியுமுன் அவர் தன் ரகசியங்களை வெளியிட விரும்பவில்லையோ அல்லது அரசாங்கத்தை நிர்ப்பந்தத்தில் வைக்கும் போராட்ட முறைகளை அவர் செவ்வையாக உருவாக்கி கொள்ளவில்லையோ, தெரியவில்லை.''

(சுபாஷ் போஸ், இந்திய போராட்டம், 1920-34, பக்.68)

''நம் தலைவர்களின் பலருக்கு சுயராஜ்ஜியம் எனில் விடுதலையைவிடக் குறைவான ஏதோ ஒன்று எனத் தெளிவாயிருந்தது. இவ்விஷயம் பற்றி காந்திஜியோ தெளிவின்மையோடு இருந்தார்; அதைப்பற்றி தெளிவாய் சிந்திக்கவும் அவர் ஊக்கம் தரவில்லை'' (ஜவஹர்லால் நேரு, சுயசரிதம், பக். 76)என நேரு வெளிபடையாகவே கூறுகிறார்.

## படுபிற்போக்காளர்கள்

காந்தியும், காங்கிரசும் சரி எவ்வாறு அவர்களுடைய திட்டத்திலேயே தெளிவற்று இருந்தார்களோ அதேபோல சிந்தனை முறையிலும் எதிர்கால இந்தியாவைப் பற்றிய கனவிலும் மிகமிக பிற்போக்குவாதிகளாகவே செயல்பட்டனர். இவர்களுடைய வேலைத் திட்டமே கிராமப் புத்தமைப்பும் தொழில்மயம் ஆவதற்கு எதிர்ப்பும் ஆகும்.

''கிராமத் தொழில்களின் ஆதிக்கத்தில்தான் உண்மையான சோசலிசம் இருக்கிறது. பெருமளவு உற்பத்தியின் விளைவாக மேலை நாடுகளில் நிலவும் குழப்பமான நிலைமைகளை நம் நாட்டிலும் தோற்றுவிக்க விரும்பவில்லை.''

(வல்லபாய் பட்டேல், அலகாபாத்தில் சொற்பொழிவாற்றியது. ஜனவரி 3, 1935)

காங்கிரசும், காந்தியும் விஞ்ஞான மனோபாவம் சிறிதும் அற்ற படுபிற்போக்காளர்கள் என்பதற்கு **'இந்திய சுய ஆட்சி'** என்ற நூலில் அவர் எழுதிய கருத்துக்களே சாட்சிகள். அதில் அவர் நவீன விஞ்ஞானத்தையும் இயந்திரத்தையும் கடுமையாகக் கண்டிக்கிறார்.

''யந்திர சாதனம் கெட்டது என்பதை உணர வேண்டியது அவசியம். அப்பால் நாம் படிப்படியாக அதை ஒழித்துவிடலாம்.''

(காந்தி, இந்திய சுய ஆட்சி, பக். 124)

''ஆஸ்பத்திரிகள் பாவத்தைப் பரப்பும் நிறுவனங்கள்''

(மேற்படி நூல், பக். 64)

1909-ல் ஒரு நண்பருக்கு எழுதிய 'நம்பிக்கையின் பாவ ஏற்பு' என்பதில்



படிப்பகம்

www.padippakam.com

*காந்தியின் பிற்போக்கு கண்ணோட்டம் மிகக் கூர்மையாக வெளிப்படுகிறது.*

''மருத்துவ விஞ்ஞானம் மாந்திரீக முறையின் வடித்தெடுத்த சாரம். உயர்ந்த மருத்துவத் திறமை எனப்படுவதற்குப் போலி வைத்தியமுறை எவ்வளவோ மேல்...''

''... சென்ற ஐம்பது ஆண்டுகளில் கற்றவற்றை எல்லாம் மறப்பதில்தான் இந்தியாவின் விமோசனம் இருக்கிறது. ரயில்வேக்கள், தந்திகள், ஆஸ்பத்திரிகள், லாயர்கள், டாக்டர்கள் இவை, இவர்கள் போன்றன மறையவேண்டும்... உணர்வோடும், சமய நம்பிக்கையோடும் மனமறிந்தும் எளிய குடியானவ வாழ்க்கை வாழக் கற்க வேண்டும்'' *(காந்தி - நம்பிக்கையின் பாவ ஏற்பு. 1909, சொற்பொழிகள், பக்கம் 1041 - 43)*

*இந்திய வறுமைக்குத் தீர்வு காணும் வழிதான் இத்திட்டம். காந்தியின் 'ராமராஜ்ஜியம்' எப்படியிருக்கும் என உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? முடியவில்லையெனில் பின்வருவன தெளிவுபடுத்தும்.*

*''பூரண சுயராஜ்யம் பெற்றதும் தாங்கள் யந்திரங்கள் யாவற்றையும் ஒழித்து விடுவீர்களா?'' என அமெரிக்க நிருபர் கேட்டதற்கு காந்தி. ''மாட்டேன். அதை ஒழிப்பதற்குப் பதிலாக நான் அமெரிக்காவிற்கு அதிக ஆர்டர் கொடுத்தாலும் கொடுப்பேன்'' என்றார்.*

*நிலப்பிரபுத்துவ பிற்போக்குவாதி காந்தியின் திட்டம் இயந்திர எதிர்ப்பு, கைராட்டை, அன்னிய இயந்திர இறக்குமதி, உள்நாட்டு தொழில் வளர்ச்சிக்கு எதிர்ப்பு என்பதன்றி வேறென்னவாக இருக்கும்?*

## ஹிந்து சநாதனி

*இங்ஙனம் கிஞ்சித்தும் விஞ்ஞான கண்ணோட்டம் இல்லையெனில் நடைமுறையில் காங்கிரசின் நோக்கு என்ன? ஐயமின்றி அஞ்ஞானப் பார்வைதான்!*

*மதசார்பின்மை என மூச்சுக்கு முன்னூறு தடவை கொட்டி முழக்கும் காங்கிரசின் எல்லாக் கிளர்ச்சிகளிலும் பிரச்சாரத்திலும் அன்றும் இன்றும் அஞ்ஞான இந்து மத போதனையே பிரபலமாக இருந்து வந்துள்ளது. 'தீவிரவாதிகள்' என பட்டம் சூட்டப் பெற்ற திலகர், அரவிந்த கோஷ் முதல் பண்டாரக் கவிஞன் பாரதிவரை, இவர்கள் உயர்த்திப் பிடித்தது இந்து தேசியம்தான்! தேசிய இயக்கத்தின் ஒரே பிரதிநிதி நானே என தன்னைத்தானே புகழ்ந்து கொண்ட காங்கிரசின் 'ஒப்புயர்வில்லா' தலைவன் காந்தி தான் ஒரு ''சநாதன ஹிந்து'' (ஒருவித தீவிரவாத, அதிநம்பிக்கை கொண்ட ஹிந்து) எனப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.*

''நான் என்னை ஒரு சநாதன இந்து என்று சொல்லிக் கொள்கிறேன். ஏனெனில்

1. வேதங்களையும், உபநிடதங்களையும், புராணங்களையும், இந்து சாத்திரங்கள் எனப்படுகிறவை அனைத்தையும், அவதாரங்களையும், மறுபிறவியையும் நான் நம்புகிறேன்.

2. என் கருத்துப்படி வேதப் பொருளில், தற்போது பொதுவான பக்குவமற்ற பொருளில் அல்லாமல், நான் வருணசிரம தருமத்தை நம்புகிறேன்.



படிப்பகம்

3. மக்கள் நம்பும் பொருளில் அல்லாமல், இன்னும் விரிவான பொருளில் நான் பசுவைப் பாதுகாப்பதை நம்புகிறேன்.

4. விக்கிர ஆராதனையை நான் நம்பாமல் இல்லை.

(காந்தி, 'எங் இண்டியா'வில், அக். 12, 1921)

*இதுமட்டுமின்றி, இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக வேண்டுகோள் விடும் தேசியத் தலைவராக அல்லாமல் ஒரு இந்துத் தலைவராகவே நடந்து கொண்டார். இந்துக்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டு, இந்துக்களை "**நாம்**" என்றும், முஸ்லிம்களை "**அவர்கள்**" என்றும் வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார்.*

"முசல்மான்களின் உள்ளங்களை **நாம்** வெல்ல வேண்டுமானால், ஆத்ம சுத்திக்காக **நாம்** தவம் இயற்றச் செல்ல வேண்டும்"

(காந்தி, 'எங் இண்டியா'வில், செப் 1924)

*காந்தியின் தலைமையில் மட்டுமா காங்கிரஸ் இந்து மதப் பிரச்சாரம் செய்தது? ஏன் இன்றும்கூட ஆர்.எஸ். எஸ். இந்து மதவெறியர்களோடு கைகோர்த்து இந்துமதப் பிரச்சாரத்தை ஊக்கப்படுத்தியே வருகிறது. நேரு, கௌல், தர், ஹக்சர், சக்சேனா போன்ற காஷ்மீரிப் பார்ப்பனர்களும், திரிபாதி, தீக்சித், சர்மா, திரிவேதி, சதுர்வேதி, மிஸ்ரா, பாண்டே போன்ற வடஇந்தியப் பார்ப்பனர்களும் பார்த்தசாரதி, நரசிம்மராவ், வெங்கடராமன், குண்டுராவ், சேஷன், மணிசங்கர் அய்யர் போன்ற தென்னிந்தியப் பார்ப்பனக் கும்பலும் இந்திரா - ராஜீவைச் சுற்றி அதிகார கோட்டைகளாக இருப்பதிலிருந்தே காங்கிரசின் தன்மையை நன்கு புரிந்து கொள்ளலாம்.*

*இந்துமதப் பண்டாரம் விவேகானந்தன் பிறந்த நாளையொட்டி இளைஞர் ஆண்டாகக் கொண்டாடுவது, கங்கையைப் புனித நதி என அறிவித்தது, இந்திரா - ராஜீவின் மரணச் சடங்குகளை இந்துமத முறையில் நடத்தியது - இவையாவும் எதைக் குறிக்கின்றன? நிச்சயமாக இந்து தர்மத்தையும், இந்து கலாச்சாரத்தையும் நடைமுறைப்படுத்தும் 'இந்து தேசிய காங்கிரஸ்' என்பதைத்தான்!*

## சர்வாதிகாரிகள்

*'இந்து தேசிய காங்கிரஸ்' குறிப்பாக போலிச் சுதந்திர ஆண்டுகளுக்குப் பின்னால், நேரு பாரம்பரியத்தின் கீழ் தனிநபர் சர்வாதிகாரத் தலைமையும், அடக்குமுறை*



www.padippakam.com

தன்மையும் கொண்ட பாசிஸ்ட் கட்சியாக மாறிவிட்டது. எழுபதுகளில் தொடங்கிய இந்த பாசிசத் தன்மை இன்று அதன் உச்சநிலையை எட்டியுள்ளது. காங்கிரஸ் தலைமையின் தனிநபர் சர்வாதிகாரத் தன்மை இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. 1939ம் ஆண்டு பட்டாபி சீத்தாராமையா என்பவரை.காங்கிரஸ் தலைவராக்க விரும்பினார் காந்தி. ஆனால் சுபாஷ் போஸ் காந்தியின் விருப்பத்திற்கு எதிராக கட்சித் தலைவருக்கான தேர்தலில் போட்டியிட்டார். 1575க்கு 1376 எனப் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார். இதனால் சீற்றம் கொண்ட சர்வாதிகாரி காந்தி, சுபாஷ்போஸின் வெற்றியை ஏற்க மறுத்தார். 'காங்கிரசை விட்டு வெளியேறி விடுவேன்' என மிரட்டினார். இறுதியில் சர்வாதிகாரி காந்தியின் விருப்பப்படியே முடிவை மாற்றியமைத்து பட்டாபி சீத்தாராமையா தலைவராக்கப்பட்டார்.

## ரௌடிக் கும்பல்

கதர் குல்லாய் அணிந்த கனதனவான்களின் கட்சியாக இருந்த காங்கிரஸ் இன்று கள்ளச் சாராய, கடத்தல், பேட்டை ரௌடிகளின் கூடாரமாக, அடியாட் கும்பலும் குண்டர் படையும் கொண்ட சமூக விரோத கட்சியாக மாறிவிட்டது. இன்றைய பெரும்பாலான காங்கிரஸ் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் கள்ளச் சாராயம், கள்ளக் கடத்தல், உளவுச் சதி, கொலை-கொள்ளை, கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றப் பதிவேடுகளில் பதிவாகியுள்ளன.

இந்த ரௌடிகள் கூடாரம் தனிநபர் ஒழுக்கத்திற்குப் பெயர் போனது. அன்று










படிப்பகம்

www.padippakam.com



இளம்பெண்களோடு நிர்வாணமாக 'ஆத்ம பரிசோதனை' செய்தார், 'உத்தமர்' காந்தி. இன்று பறக்கும் விமானத்தில் விமானப் பணிப் பெண்ணிடமும், இரவில் தனித்து வரும் இளம் பெண்கள், நடிகைகளுடன் அம்மண ஆட்டம் போட்டும் 'ஆத்ம பரிசோதனை' செய்யும் மத்திய, மாநில மந்திரிகள் - என காங்கிரஸ் தன் தகுதியை உயர்த்திக் கொண்டுள்ளது.

'மனிதருள் மாணிக்கம்' நேரு, மவுண்ட்பேட்டன் மனைவி எட்வினாவுடன் ஆடிய காதல் களிவெறியாட்டங்கள் அண்மையில் உலகம் முழுதும் அம்பலப்பட்டு நாறியுள்ளது. மாற்றான் மனைவி மீது மையல் கொண்ட இந்த கழிசடைதான் இந்தியக் குழந்தைகளின் 'மாமா'வாம்! நேரு - எட்வினா காதல் களியாட்ட விவகாரம் காங்கிரஸ் தலைவர்களின், ஏன் ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளின் வெட்கக்கேடான 'தனிமனித ஒழுக்கத்திற்கு' மிகத் துல்லியமான எடுத்துகாட்டு!

இங்ஙனம், அசிங்கங்களையே ஆபரணமாக அணிந்திருக்கும் காங்கிரஸ் போலிச் சுதந்திர ஆண்டுகளுக்குப்பின் ஏகாதிபத்திய எஜமானர்கள் மற்றும் உள்ளூர் எஜமானர்களான தரகு முதலாளிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் முன்னிலும் மிகுந்த விசுவாசத்துடன் ஊழியம் செய்து வருகிறது. தொடர்ந்து ஆங்கிலேய ஏகபோகத்தின் சுரண்டலைப் பாதுகாத்து வருவதோடு ஜெர்மன், ஜப்பான் முதலான நாடுகளின் ஏகபோக மூலதனங்கள் நுழைவதற்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் பூதாகரமாக வளர்வதற்கும் வழிவகை செய்துள்ளது. சமூக ஏகாதிபத்தியமாக ரசியா சீரழிந்தபின் நமது நாட்டைச் சுரண்டவும் கொள்ளையிடவும் சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்றுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், காங்கிரஸ் கட்சி ஏகாதிபத்திய ஏவல் நாய்களின் கூடாரம்; தேசவிரோத தரகு முதலாளிகளின், நிலப்பிரபுத்துவ நீசர்களின் பாதச் செருப்பு; சமூக விரோதிகளின் கடைசிப் புகலிடம்; நாட்டைக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்களின் உறைவிடம்; இந்து மதவெறியர்களின் - பார்ப்பன கும்பலின் மடம்; கிஞ்சித்தும் ஜனநாயகமற்ற தனிமனித சர்வாதிகாரிகளின் வாழ்விடம்; மக்கள் போராட்டங்களைத் திசைதிருப்பி காட்டிக் கொடுத்து கழுத்தறுக்கும் கயவர்களின் முகாம்; அடக்கு முறைச் சட்டங்களைப் போட்டு மக்களை ஒடுக்கும் பாசிஸ்டுகளின் பாசறை; தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கிவரும் தேசிய வெறியர்களின் கொட்டடி; புரட்சியாளர்களைக் கருவறுக்கும் மக்கள் விரோத கொலைக் கருவி; சாதி, மத, இன ரீதியாக மக்களை மோதவிட்டு உதிரம் குடிக்கும் ஓநாய்களின் மறைவிடம்; பாசிசத்தைச் சுமந்துவரும் பல்லக்கு!



படிப்பகம்

www.padippakam.com

இத்தனைக் குப்பைகளையும் மறைத்துவிட்டு, அவற்றை வரலாற்றுச் சிறப்புமிக்க ஏடுகளாகக் காட்டுவதும், நிமிடத்திற்கு நிமிடம் துரோகத்தனத்திலேயே வளர்ந்த காங்கிரஸ் கட்சியைத் தியாகப் பரம்பரையாகச் சித்தரிப்பதும் எத்தர்களின் வேலையே என்பதை இனியும் மறைக்க முடியாது. சாக்கடையில் வாசனைத் திரவியம் ஊற்றி மணத்தைக் கூட்ட முயற்சிப்பதும், விஷத்திலே தேன் கலந்து வியாபாரம் செய்வதும் இனியும் நீடிக்காது. அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டும், அரசியல் பித்தாலாட்டத் திட்டங்கள் கொண்டும் நீண்டுவரும் உண்மையின் கூர்முனையைத் தடுத்துவிட முடியாது. உழைக்கும் மக்களின் உக்கிரமான போராட்டத் தீயில் கதர்க் குல்லாய்கள் கருகுவது நிச்சயம்.

புரட்சிகர சக்திகளின் போராட்டப் பெரும்புயல் நமது நாட்டின் ஆதிக்க சக்திகளான ஏகாதிபத்தியங்களையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து வீசிக் கொண்டிருக்கிறது. இந்திய உழைக்கும் மக்கள் புதிய ஜனநாயகப் புரட்சியில் வாகை சூடும் போது காங்கிரசின் மீதமிச்ச குப்பைகளும் எரிக்கப்படும். துரோக வரலாறு ஒழிக்கப்பட்டு புதிய ஜனநாயகப் புரட்சி வரலாறு பொறிக்கப்படும்!

- மக்கள் விரோத காங்கிரஸ் கட்சியைப் புறக்கணிப்போம்!
- அகிம்சாமூர்த்தி' காந்தியின் துரோகங்களை அம்பலப்படுத்துவோம்!
- போலிச் சுதந்திரத்தைத் திரை கிழிப்போம்!
- புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம்!





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

புரட்சிகர மாதமிருமுறை அரசியல் ஏடு



**படியுங்கள்!**




# புதிய கலாச்சாரம்

மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்


படிப்பகம்

www.padippakam.com



RSYF

இச்சிறு வெளியீடு கேடுகெட்ட காங்கிரஸ் கட்சியின் துரோக வரலாற்றை — அதன் துவக்க காலம் முதல் போலிச் சுதந்திரம் அடையப் பெற்றது வரை — சுருக்கமாக விளக்குகிறது. வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கள்ளக் குழந்தையே காங்கிரஸ் என்பதை ஆதாரப் பூர்வமாக அறைந்து கூறுகிறது. 'அஹிம்சா மூர்த்தி' காந்தியின் அருவருக்கத்தக்க துரோகத்தைப் பளிச்சென படம் பிடித்துக் காட்டுகிறது. கத்தியின்றி ரத்தமின்றி பெற்றதாக வெட்கமின்றி கூறப்படும் 'சுதந்திர' நாடகத்தை திரை கிழித்துக் காட்டுகிறது. அன்னிய ஏகாதிபத்தியங்களின் அடிவருடிகளாக, தரகு முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் அரசியல் கூடாரமாக, மக்கள் போராட்டங்களைத் திசை திருப்பிக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக, தேச விரோத மக்கள் விரோத சமூக விரோத பாசிச கும்பலாகச் சீரழிந்து, நூறாண்டுகளாக வேர்விட்டு நிற்கும் காங்கிரஸ் நச்சு மரத்தை வெட்டியெறிய, அது கட்டிக் காக்கும் அரைக் காலனிய-அரை நிலப்பிரபுத்துவ இந்திய சமூக அமைப்பைத் தூக்கியெறிய அறைகூவல் விடுக்கிறது.



படிப்பகம்